215056

# செந்தமிழ்

தொகுதி XXXII

Dec - Jan 1935

G

JL
O31m 21, N03(4.
N35.32.2
215056.

1400

1400

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 DEC 1934
MADRAS

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௨] பவ௵ மார்கழி௴ [பகுதி-௨.

Vol. XXXII. December 34.-January 1935 No. 2.

உள்ளுறை.


| | | |
|---|---|---|
| நியாயப்பிரவேச மணிமேகலை:— | பத்திராசிரியர் | ௨௫-௩௨ |
| பரிசோதனத்தொடர்:- | ஸ்ரீமத். T. N. அப்பனையங்கார் | ௩௩-௪௰ |
| சித்தசுத்தி:- | ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் B.A., B.L. | ௪௧-௪௪ |
| காலம்:- | ,, K. S. விஸ்வநாத சாஸ்திரிகள். வித்வான், P.O.L | ௪௫-௫௰ |
| ஒல்லையூர்:— | ,, திரு. சோமசுந்தரதேசிகர். | ௫௧-௫௩ |
| பெருவாயில்:— | ,, திரு. சோமசுந்தரதேசிகர். | ௫௩ |
| மதிப்புரை:— | | ௫௪-௫௫ |
| கம்பராமாயண இன்கவித்திரட்டு:- | ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B. V.C. | ௫௬ |
| கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்) | ,, மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்ய கலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர் | 81–96 |
| பெருந்தொகை முதற்குறிப்பகராதி: | ,, மு. இராகவையங்கார். | XI-XVIII |


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0

1934.

...imathu R. Shanmuga Rajeswara ...ha Sethupathy Avergal, and ...y Thiru. Narayana Iyengar at the ... Power Press, No. 54, New Jail Road, Madura.

21556

உ

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 DEC 1934
MADRAS

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௨] பவ௵ மார்கழி௴ [பகுதி-௨.
Vol. XXXII. December 34.-January 1935 No. 2.

## நியாயப்பிரவேச மணிமேகலை.

'மணிமேகலை' என்னும் அரிய தமிழ்நூலானது தமிழ்நூற்பரிசோதனையே தமக்குப் பொழுதுபோக்காகக்கொண்ட மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்களால் நன்கு பரிசோதிக்கப்பெற்று, அவர்களெழுதிய குறிப்புரையுடன் அச்சிடப்பெற்றிருக்கிறது. அஃது இயற்றமிழ்வளர்ச்சிக்குரியதாயிருந்துவருவது யாவருமறிவர்.

அம்மட்டேயன்றி, அந்நூலின்கண்ணுள்ள இருபத்தொன்பதாம் பாட்டுத் தமிழ்மக்களுக்குப் பழமையாகக் கிடைத்த ஒருவகையான தருக்கநூலுணர்ச்சியை எளிதிலுண்டாக்குவதற்கு விதை வித்தியது போல் விளங்கிநின்று நாளடைவில் முளைத்துக் கிளைத்துப் பயனளிக்கும் நிலைமையடைந்துவருகிறது.

ஐயாவர்கள் அச்சிடுங்காலத்தில் அப்பாட்டு இன்னநூற்கருத்தைத் தழுவியெழுதப்பட்டதென்பது முதலிய வரலாறு ஒன்றும் விளங்காமையால் அதற்குக் குறிப்புரை யெழுதப்படவில்லை. அதன் முதனூல் இன்னதுதான் என இதுகாறும் ஆராய்ச்சிகளால் நிச்சயிக்கப்பட்டதில்லை.

ஆயினும் அப்பாட்டினுள் நுவல்பொருள்கூறுமிடத்தில்

'ஆதிசினேந்திரனளவையிரண்டே
ஏதமில்பிரத்தியங் கருத்தளவென்ன'

என்ற அடிகளுள் ஆதிசினேந்திரனளவையென்று செய்யுட்கிழமை தோன்றச் சொல்லியிருத்தலால், அவ்வளவைகளிரண்டையும் சைநாகமத்திலிருந்தே தெரிந்து சொல்லியிருக்கலாமென்று தோன்றுகிறது. இதனை அவ் வாகமப்பகுதி கிடைத்தாலறியலாம்.

இவ்வாறன்றி ஆராய்ச்சியாளர்களுள் ஒருசிலர், வடமொழியிலுள்ள நியாயப்பிரவேசமென்னும் நூலுக்கும் மணிமேகலைக்கும் பெரும்பாலுமுள்ள சொற்பொருளொற்றுமைகளைக்கொண்டு, மணிமேகலைத்தருக்கம் நியாயப்பிரவேசமென்னும் நூலிலிருந்து எழுதப்பட்டிருப்பதாகக் கருதுகிறார்களென்று தெரிகிறது.

அவர்களெழுதிய ஆராய்ச்சியுரைகளெல்லாம் ஆங்கிலமொழியிலெழுதப்பட்டமையால் அவை தமிழறிஞர்பலர்க்கும் பயன்படுதல் அருமையுடையன. ஆராய்ச்சியாளர்கள் ஒற்றுமைகளைக்கண்டு ஆராய்தலோடமையாது வேற்றுமைகளையும் கண்டு ஆராய்தலே மிகச்சிறந்தது. ஆதலால், அவ்விருவேறு நூலினுமுள்ள விடயங்களின் ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் நன்கு விளங்குமாறு தமிழில் எழுதிக்காட்டினால் அவ்வாராய்ச்சியில் விருப்புடைய தமிழறிஞர் பலர்க்கும் பயன்படுமென்பது கருதியும், தருக்கநூல் கற்கும் தமிழ்மாணவர்களுக்கு அந்நூற்பொருளுணர்ச்சி எளிதினுதித்தல்கூடுமென்பது கருதியும் இப்பொருளுரை வரையப்படுகிறது. இதிலுள்ள குற்றங்குறைகளை, கற்றகேட்ட பெரியோர்கள் கண்ணுற்றுத் திருத்தி நிறைத்துக்கொள்வார்களாக.

மணிமேகலையிருபத்தொன்பதாம்பாட்டின் முதலடிமுதல் நாற்பத்துநான்காமடியளவும், அறவணவடிகளும், மாதவிமகள் மணிமேகலையும் கச்சிமாநகர்புக்கவரலாறு முதலியன மொழிந்து அளவளாவிக் கொண்டமைகூறி, நாற்பத்தைந்தாம் அடியால் ‘அடிகண்மெய்ப்பொருளருளுக’ என்று மணிமேகலைகேட்ப ‘தொடிக்குவன் நங்காய்நுண்ணிதிற் கேள்நீ’ என்று தொடங்கி, அறவணவடிகளே மொழிவதாக அப்பாட்டு நடைபெறுகிறது.



அதன் நாற்பத்தேழாம் அடிதொடங்கி நூற்றுப்பத்தாம் அடிவரை சொல்லப்பட்ட பொருள் பெரும்பாலும் நியாயப்பிரவேசத்தில் இல்லை. நியாயப்பிரவேசம் முதனூலாயிருக்குமானால் அதனுட்சொல்லப்படாதபொருள்களையும் தமிழ்மொழிபெயர்ப்பாளர் கூட்டியுரைத்தார் எனக்கொள்ளல்வேண்டும். அங்ஙனம் கூட்டியுரைக்கும் துணிவுடையரல்லர் என்பதை, தமிழ்நடைக்கியைய வடசொற்களைத் தமிழ்மொழியாக்கிக்கொள்ளவும் விரும்பாது, பெரும்பாலும் வடமொழிவிரவியதொடர்களை அப்படியே அவர் வழங்கிவருதலாலறியலாம்.

அம்முதற்பகுதியின் பெரும்பாகம், சுத்ததருக்கமுறையினின்றும் புத்ததருக்கமுறை சிறிது வேறுபட்டிருப்பதற்குக் காரணங்காட்டிப் பிறர்மதங்களைந்து தம்துணிபுநாட்டிச்செல்லுவதுபோற் றோன்றுகிறது. அது பின்பு ஆராயப்படும்.

நியாயப்பிரவேசத்தின் தொடக்கத்தில்,

(1) ஸாதநம் தூஷணஞ்சைவ ஸாபாஸம் பரஸம்விதே ।
ப்ரத்யக்ஷமநுமாநஞ்ச ஸாபாஸந்த்வாத்மஸம்விதே ॥
இதி ஶாஸ்த்ரார்த்தஸங்க்ரஹ: ।

என்று நூல்நுதலியபொருள் சொல்லப்பட்டிருக்கிறது.—அப்பொருள் பரார்த்த ஞானத்துக்குரிய (1) சாதனமும், (2) *தூஷணமும், (3) சாதனா†பாசமும், (4) தூஷணாபாசமுமாகிய இவற்றோடு, ஸ்வார்த்த ஞானத்துக்குரிய (5) பிரத்தியக்ஷப்பிரமாணமும், (6) அநுமானப்பிரமாணமும், (7) பிரத்தியக்ஷாபாசமும், (8) அநுமானாபாசமும் என எட்டுவகைப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மணிமேகலையுள் இவ்வாறெட்டுவகையாகப் பகுக்கப்பட்ட நுவல்பொருள்களில்லை. ‘(௪௭-௪௮) ஆதிசினேந்திரனளவையிரண்டே, ஏதமில் பிரத்தியங்கருத்தளவென்ன.’ என்று இரண்டுவகை நுவல்பொருளே

*தூஷணம் - குற்றங்கூறுதல்.

†ஆபாஸம் - போலி.

சொல்லப்பட்டன. அவற்றுள்ளும் கருத்தளவையின் வகையாகிய பக்கம் ஏது திட்டாந்தம் என்னும் சாதனமும், பக்கப்போலி ஏதுப்போலி திட்டாந்தப்போலி என்னும் சாதனபாசமுமே பெரும் பாகம் கூறப்பட்டன.

மணிமேகலைத்தருக்கத்தில் தொடக்கத்திற் சுருங்கச்சொல்லிய பிரத்தியக்க அநுமானங்கள், நியாயப்பிரவேசத்தில் நூன்முடிவிற் சொல்லப்பட்டுள்ளன. இஃதன்றியும் நியாயப்பிரவேசத்தின் தொடக்கத்திலுள்ளன சில மணிமேகலையிலில்லை; மணிமேகலைத்தருக்கத்தின்றொடக்கத்திலுள்ளன சில நியாயப்பிரவேசத்திலில்லை. இது ஒரு முதன்மையான வேறுபாடு.

நியாயப்பிரவேசத்தில் பக்கவசனம், ஏதுவசனம், திட்டாந்தவசனம் இம்மூன்றற்கும் 'சாதனம்' எனப் பெயர்தந்து அதற்குக் காரணம் காட்டப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

(2) பக்ஷாதிவசநாநி ஸாதநம்। பக்ஷஹேதுத்ரு
ஷ்டாந்தவசநைர்ஹி ப்ராஶ்நிகாநாமப்ரதீதோ
ऽர்த்த: ப்ரதிபாத்யத இதி॥ என்பது.

இதன் பொருள்: பக்கம் ஏது திட்டாந்தங்களைக்கூறும் கூற்றுக்கள் சாதநமென்று பெயர்பெறும்; என்னை? * பக்கம், † ஏது, ‡ திட்டாந்தம் என்னும் இவைகளைக்கூறுதலாலன்றோ கேட்போரால் அறியப்பட்டிராத பொருள் அறிவிக்கப்படுகிறது என்பது.

இப்பகுதி மணிமேகலையில் இல்லை.

நியாயப்பிரவேசத்தில் பக்ஷலக்ஷணம் வருமாறு :—

(3) தத்ர பக்ஷ: ப்ரஸித்தோ தர்மீ ப்ரஸித்தவிஶேஷண
விஶிஷ்டதயா ஸ்வயம் ஸாத்யத்வேநேப்ஸித:
(ப்ரத்யக்ஷாத்யவிருத்த இதி வாக்யஶேஷ:।) என்பது.

---

* பக்கம்—இஃது இத்தன்மைத்து, எனத் துணிவுபெறக்கூறும் வாக்கியம்.

† ஏது—இஃது, இத்தன்மையுடைமையால், என அத்துணிவைப் பிறப்பிக்கும் வாக்கியம்.

‡ திருஷ்டாந்தம்—இஃது, இன்னதுபோலும் என ஏதுவினிலைக்களத்தில் துணிபொருளும் உளதாகக் காட்டும் வாக்கியம்.



இதன் பொருள்: அவற்றுள் பக்ஷமாவது, வாதிபிரதிவாதிகளால் அங்கீகரிக்கப்பட்ட தருமியானது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விசேஷணத்துடன் கூடியிருக்கும் தன்மையானே, அது சாத்தியமாக விரும்பப்படுவது என்பதாம். (பிரத்தியக்க முதலியவற்றால் மாறுபடலாகாதென்பது வாக்கிய சேடப்பொருள்.)

இங்கு சாத்தியம் என்றது துணிபொருளையுடைய தருமியே விசேடணத்துடன்கூடியதாய்ச் சித்திபெறவேண்டியநிலையிலிருப்பதாகக் கூறியவாறு. (பக்கவிசேடணத்தையே சாத்தியமென்பர் தருக்கநூலார்.)

இங்குச்சொல்லப்பட்ட இலக்கணம் பொருளைப்பற்றியது. மணிமேகலையிற் சொல்லப்படுவது சொல்லைப்பற்றியது.

மணிமேகலையில் பக்ஷலக்ஷணம் வருமாறு:—

(ககங—ககஎ) வெளிப்பட் டுள்ள தன்மி யினையும்
வெளிப்பட் டுள்ள சாத்தியதன் மத்திறம்
பிறிதின் வேறும் வேறுபாட் டினையும்
தன்கட் சார்த்திய நயந்தருத லுடையது
நன்கென் பக்கமென நாட்டுக. என்பதாம்.

இதன்பொருள்: வெளிப்பட்டுள்ள - உபயவாதிகளுக்கும் பிரசித்தமாய் அங்கீகரிக்கப்பட்ட, தன்மியினையும் - துணிபொருளாகிய சாத்திதருமத்தால் விசேடித்தற்குரிய விசேடியமாகிய தருமியையும். வெளிப்பட்டுள்ள - முன்சொல்லியவாறு வேறிடங்களில் பிரசித்தமாய் உபயவாதிகளாலும் அறியப்பட்ட. சாத்தியதன்மத்திறம் - சாத்திய தருமவிசேடத்தையும். பிறிதின் வேறுப் வேறுபாட்டினையும் - பிற பொருளினின்று தான் வேறுதற்குக்காரணமாகிய வேற்றுமையையும். தன்கட்சார்த்திய - பக்கவசனமாகிய தன்னிடத்துச் சார்த்திக்கூறிய. நயந்தருதலுடையது - பக்கப்போலியாதற்குரிய குற்றங்களின்றிக் குணமுடைமையுடையது. நன்கென்பக்கமென நாட்டுக - நல்லதென்று சொல்லத்தக்க பக்கவசனமாக நாட்டிக் கூறக்கடவது என்பதாம்.

பிறிதின் வேறும் வேறுபாடாவது, பக்கம் சபக்கவிபக்கங்களினின்றும் வேறுபட்டிருத்தல். இவ்வேறுபாடு, தருமியின்வாயிலாகத்தன்கட் சார்த்தப்பட்டது. சாத்தியதன்மத்திறத்தினையும் என்னற்குரிய சாரி

யையும் உருபும் உம்மையும் விரித்துரைக்கப்பட்டன. இங்குச்சொல்லப்பட்ட பிறிதின்வேறும்வேறுபாடு நியாயப்பிரவேசத்திற் பக்ஷலக்ஷணத்தில் சொல்லப்படவில்லை. அதனால் அந்நூன்மரபினருக்குப் பிறிதின்வேறும் வேறுபாடில்லாத எல்லாம் என்னும் சொற்பொருளையும் பக்ஷமாகக்கொண்டு, எல்லாப்பொருளும் அநித்தம் என்று பக்ஷவசனம் சொல்லலாம் என்பதும் உடன்பாடென்று தோன்றுகிறது. வைதிகருள்ளும் ஒருசாரார்க்கு இஃதுடன்பாடாகும்.

மணிமேகலை நூன்மரபினர்க்கு, பிறிதின்வேறும்வேறுபாடும் பக்ஷலக்ஷணத்திற் சேர்க்கப்பட்டிருத்தலால், எல்லாப்பொருளும் அநித்தம் என்று பக்ஷவசனம் கூறில், எல்லாம் என்னும் சொற்பொருளுக்குப் பிறிதாயொருபொருளுமில்லாமையால், அதற்குப் பிறிதின்வேறும்வேறுபாடில்லாமைபற்றி அதனைப் பக்ஷவசனமாகக்கொள்ளத்தகாதென்பதே உடன்பாடென்று தோன்றுகிறது. இக்கொள்கை சத்ததருக்கமுறையுடைய நியாயநூலார்க்கெல்லாம் உடன்பாடாம்.

இப்படியானகொள்கைவேறுபாடுடைய நூல்கள் ஒன்றற்கொன்று முதனூலும் வழிநூலுமாகக்கொள்ளற்கிடமில்லை; பின்னும் சிலகொள்கை வேறுபாடும் காட்டப்படும். அன்றியும், மணிமேகலை நூலாசிரியர் தமிழ்ப் புலவராதலால் வடநூற்கருத்துக்களைத் தாமே திருத்தியமைத்துக்கொள்ளவும் துணியாரென்று தோன்றுகிறது.

---

இனி, நியாயப்பிரவேசத்தில் பக்ஷவசனத்துக்கு உதாரணம் வருமாறு:—

(4) யதா² நித்யஶ்ஶப்³த³:, அநித்யோ வேதி । என்பது.

இதன் பொருள்:-பக்ஷவசனம் எங்ஙனமெனில்? 'சத்தம் நித்தம்' என்றேனும் (அல்லது) 'சத்தம் அநித்தம்' என்றேனும் (வாதி) சொல்லுவது என்பதாம். இவ்வுதாரணவாக்கியங்களும் மணிமேகலையுதாரணவாக்கியங்களும், முன்பின்னாக முழுதும் மாறிநிற்கின்றன. இங்கு பக்ஷவசனத்துக்கு உறுப்பாயுள்ள தருமி இன்னது, சாத்தியதருமம் இன்னது என விளங்கக்கூறவில்லை. மணிமேகலை அவற்றை விளக்குகிறது.



மணிமேகலையில் பக்ஷவசனத்துக்குக்கு உதாரணம் வருமாறு:—

(௧௧௭—௧௨௧) அதுதான்,

சத்த மநித்த நித்தமென் றொன்றைப்
பற்றி நாட்டப் படுவது; தன்மி
சத்தம்; சாத்திய தன்ம மாவது
நித்தா நித்தம். என்பது.

இதன்பொருள்: அதுதான் என்றது முன்சொல்லப்பட்ட பக்கவசனத்துக்கு உதாரணம் என்றவாறு. சத்தம் அநித்தம் நித்தம் என்று ஒன்றைப்பற்றி நாட்டப்படுவது என்றது, சத்தம் அநித்தம் என்றேனும் அல்லது, சத்தம் நித்தம் என்றேனும் ஒருதுணிபொருளைப்பற்றி நாட்டிப்பேசுதற்கு உறுப்பாயிருக்கும் தொடர்மொழி என்பதாம்.

நாட்டப்படுதலாகிய தொடர்மொழிப் பொருளின்தொழில் சொற்பொருளொற்றுமைபற்றி அத்தொடர்மொழிமேனின்றது.

தன்மிசத்தம் என்றது இப்பக்கவசனத்துதாரணத்துள் அதற்குறுப்பாயுள்ள சத்தம் என்பது தருமிவாசகமாம் என்றபடி.

சாத்தியதன்மமாவது நித்தாநித்தம்என்றது சாத்தியதன்மவாசகமாவது, 'சத்தம் நித்தம்' என்ற உதாரணத்தில் 'நித்தம்' என்பதும் 'சத்தம் அநித்தம்' என்ற உதாரணத்தில் 'அநித்தம்' என்பதுமாம் என்றவாறு.

இங்கு நித்தம், அநித்தம் என்றவற்றை முறையே நித்தியத்துவம், அநித்தியத்துவம் எனக்கொள்க. பின்னும் இவ்வாறு வருமிடங்களில் பொருள்நோக்கம்பற்றித் திரித்துகொள்க

இதனுள் தருமியின்னது, சாத்தியதருமம் இன்னது என்று பிரித்துக் காட்டியிருப்பது விசேடம்.

---

இனி, ஏது நிரூபணம் வருமாறு:—

(5) ஹேதுஸ்த்ரிரூப:। கிம் புநஸ்த்ரைரூப்யம்? பக்ஷத⁴ர்மத்வம், ஸபக்ஷே ஸத்த்வம், விபக்ஷே சாஸத்த்வமிதி। என்பது.

இதன்பொருள்: ஏது மூன்றிலக்கண முடையதாயிருக்கும். அம்மூவகையிலக்கணமும் எங்ஙனம் எனில்? பக்கத்துக்கு விசேடணமாதலும், சபக்கத்தில் உள்ளதாயிருத்தலும், விபக்கத்தில் இல்லதாதலும் என்பதாம்.

மணிமேகலையிலிது வருமாறு:—

(௧௨௧—௧௨௪) ........நிகழுநல் லேது,
மூன்றுய்த் தோன்றும் மொழிந்த பக்கத்
தூன்றி நிற்றலும் சபக்கத்து உண்டாதலும்
விபக்கத்தின்றியே விடுதலும்........என்பதாம்.

இதன் பொருள்: நிகழுநல்லேது என்றது வழங்குதற்குரிய நல்லேதுவின் இலக்கணம் என்றவாறு.

நிகழ்த்தும் எனற்பாலது நிகழும் எனத் தன்வினையாகத் திரிந்து நின்று ஏதுவென்னும் செயப்படுபொருட்பெயர் கொண்டது. வழங்கப்படும் நல்லேது என்றபடி. இவ்வடை இங்குப் பொருள்பற்றியிலக்கணம் சொல்லப்படுகிறதென்பது குறித்துநின்றது.

மொழிந்த பக்கத்து என்றது முன்சொல்லிய இலக்கணமமைந்த (பிறிதின் வேறும் வேறுபாடும், சாத்தியதன்மமு முடைய) தருமியில் என்றபடி.

ஊன்றி நிற்றலும் என்றது எதிரியாலசைக்கப்படாததாய்ப் பிரசித்திபெற்றதாயிருத்தலும் என்றவாறு.

சபக்கத்துண்டாதலும் என்றது சபக்கமுழுது மில்லையாகாது சிலவிடங்களிலேனும் உண்டு என்று சொல்லும்படி யிருந்தாலும் போதும் என்பதுபட நின்றது. இதனுல் நெருப்புடைமை துணியுமிடத்து, புகையுடைமையாகிய ஏது நெருப்புள்ள சபக்கமாகிய பழுக்கக்காய்ச்சிய இரும்பில் இல்லாமற்போனாலும், பாகசாலை முதலிய நெருப்புள்ள சபக்கத்தில் எங்கேனும் உண்டென்று கொள்ளக்கிடத்தலால் அத்துணையே அமையுமென்றவாறுயிற்று.

விபக்கத்தின்றியேவிடுதலும் என்றது விபக்கமாகிய துணிபொருளில்லாத இடங்களில் ஓரிடத்துமில்லாததாகவே யமையவேண்டுமென்பதுபட நின்றது.

இந்த ஏது விலக்கணம் முழுதும் நியாயப்பிரவேசத்தை ஒத்திருக்கிறது.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

# பரிசோதனத் தொடர்.

(சொல்-இளம்பூரணம்.)

[௮—ஆம் பக்கத்தொடர்ச்சி.]

பரிசோதனம் 9. (கிளவியாக்கம் 61.) "எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே" என்பது சூத்திரம். 'மேலைச்சேரிக்கோழி அலைத்தது' என எடுத்தமொழி 'கீழைச்சேரிக்கோழி அலைப்புண்டது' எனத் தன் இனப்பொருளுணர்த்தலும், 'குடங்கொண்டான் வீழ்ந்தான்' என எடுத்தமொழி 'குடம் வீழ்ந்தது' எனத் தன் இனப்பொருளுணர்த்தலும் போன்ற 'அருத்தாபத்தியை' இளம்பூரணர் இச் சூத்திரத்திற்குப் பொருளாகக் கொண்டனர்.

இதன் உரையில் 'செப்பலும் உரித்து' என்ற உம்மையின் பொருளை விரித்துரைக்கின்ற பகுதி, அச்சுப்புத்தகத்தில், "செப்பலும் உரித்து எனவே செப்பாதன 'ஆவாழ்க, அந்தணர் வாழ்க' என்றவழி, ஒழிந்தனவும் ஒழிந்தாரும் சாக என்றவாறு அன்று என்பதாம்" என்று பதிக்கப்பட்டுள்ளது. இது பழையபிரதியில், "செப்புதலும் உரித்து எனவே செப்பாதன 'ஆவாழ்க, அந்தணர் வாழ்க' எனவரும். ஒழிந்தனவும் ஒழிந்தாரும் சாக என்றவாறன்று." என்று இரண்டு வாக்கியமாகத் தெளிவாய் எழுதப்பெற்றிருக்கிறது. பிழையறப் பொருளை நன்கு விளக்குதலின், பிந்தின பாடமே சுத்தமானதென்று கொள்ளத்தகும்.

பரிசோதனம் 10. (கிளவியாக்கம் 6?.) "கண்ணுந் தோளு முலையும் பிறவும், பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி, பன்மை கூறுங் கடப்பா டிலவே, தம்வினைக் கியலு மெழுத்தலங் கடையே" என்பது சூத்திரம். கண்ணும் தோளும் பிறவுமாகிய சொற்கள், தம்வினைக்கியலுமெழுத்தான் முடியாது, தம் முதல்வினைக்கேற்ற எழுத்தான் முடிகின்றுழித் தமக்குரிய பன்மைப்பாலாற்கூறுங் கடப்பாடில; என்பது இதன் பொருள். கண் நல்லள், தோள் நல்லள் என்பன போல்வன இதற்கு உதாரணம்.

இனி, இங்கு ஒருமைசுட்டிய சினைக்கிளவி தம் முதல்சினைக்கேற்ற எழுத்தான் முடிந்து, 'மூக்கு நல்லள்' 'கொப்பூழ் நல்லள்' எனவருதற்கும் உரையாசிரியர் ஒருவகையாக அமைவு காட்டியுள்ளனர். அங்ஙனம் அவர் காட்டிய விசேடவுரை அச்சுப்பிரதியிற் சில தவறுகளோடு கூடியுள்ளது.

"ஒருமை சுட்டிய சினைக்கிளவி ஒருமை கூறுங் கடப்பாடில்லன. அவற்றிற்கு ஒத்து என்னைபிறவெனின்;"—என்று அச்சுப்பிரதியிற் காணும் அவ் விசேடவுரையின் முற்பகுதி, பழைய பிரதியில், "ஒருமை சுட்டிய சினைநிலைக்கிளவி ஒருமை கூறுங் கடப்பாடில்லனவற்றிற்கு ஒத்து என்னை பிறவெனின்" என்று திருத்தமாக வரையப்பெற்றிருக்கிறது.

இதுவேயன்றி, அவ்விசேடவுரையின் பிற்பகுதி அப்பதிப்பில்—"மேற் 'காலமுலகம்' என்று திணைவழுக்காத்துவாராநின்ற அதிகாரத்திடையே 'எடுத்தமொழியினஞ்செப்பலு முரித்தே' என்னுஞ் சூத்திரத்தை இடனன்றி வைத்தார்; அதுநிலமாகத் தந்துரைத்தவற்றையுங் கொள்க:" என்றிருப்பதன் இறுதிவாக்கியமும் பொருள் காண்பதில் மாணுக்கரைச் சிறிது இடர்ப்படுத்துகின்றது. இங்கே, 'தந்துரைத்தவற்றை' எனச் சந்திகூட்டி யச்சிட்டது, அவ்விடத்து முன்னரே தந்துரைக்கப்பட்டன வேறு யாவேனும் உளவோ என்னும் ஐயத்திற்கிடனாய் மயக்கமுறுவிக்கும்.

ஆகையால் அவ்வாக்கியம், "அது நிலமாகத் தந்துரைத்து அவற்றையுங் கொள்க." என்று திருத்தப்படல் வேண்டும். 'தந்துரைத்தவற்றை' என்பது 'தந்துரைத்து அவற்றை' எனப் பிரிந்து நின்றவழியல்லது, அது நிலமாக அவற்றையும் தந்துரைத்துக்கொள்க என—இளம்பூரணர் கருதிய பொருள் இனிதின் விளங்காது. இங்கு அவற்றை' என்றது 'ஒருமைசுட்டிய சினைக்கிளவி ஒருமை கூறுங்கடப்பாடில்லன' வற்றைச் சுட்டி நின்றது. மூக்கு நல்லள், கொப்பூழ் நல்லள் என வருவனவும் அவையே யாகும்.



பரிசோதனம் 11. (வேற்றுமையியல் 2.) "விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே" என்பது சூத்திரம். இதன் பொருள், மேல் 'ஏழெனமொழிப' என்று சொல்லப்பட்ட வேற்றுமை விளியொடுசேர எட்டாம் என்றவாறு. இதனுள் 'விளிகொள்வது' என்றது விளிகொள்ளும் பெயர் என்றவாறு. 'அதன்கண் விளி' என்றது, பெயருமாகாது பெயரின் வேறுமாகாது திரிந்தும் இயல்பாயும் நின்று, விளித்தற்பொருளுணர்த்தும் அப்பெயரின்கண் இறுதி என்றவாறு. விளித்தல் - அழைத்தல் (அல்லது) கூவுதல்.

இப்பொருளை விளக்கவுரைக்கும் பகுதி, அச்சுப்புத்தகத்தில், "விளிகொள்வதன்கண் விளியோடு எட்டுவகைப்படும் என்றவாறு. வேற்றுமை விளிகோள்வது என்பது பெயரதன்கண் விளி என்றவாறு. விளித்தல் என்பது கூறுதல்." என்று இங்ஙனம் பலவகைப்பிழையுற முதல் வாக்கியத்திற்கும் இரண்டாம் வாக்கியத்திற்கும் இடையே பத்திபிரித்தும் பதிக்கப்பட்டுள்ளது.

இங்கு முதல் வாக்கியத்தில், எட்டுவகைப்படும் என்னும் பயனிலைக்கு எழுவாய் வெளிப்படத்தோன்றாதது ஒரு குறை. எட்டுவகைப்படுவது யாது? என்னில் 'வேற்றுமை' என்பது விளங்கிநிற்றல் வேண்டும். இரண்டாம் வாக்கியத்தில், 'வேற்றுமை விளிகொள்வது' என்னுந் தொடரும் 'பெயரதன்கண் விளி' என்னுந்தொடரும் பொருட்பொருத்த முறாமையால் அவையும் பிழைபட்டனவே. மூன்றும் வாக்கியத்தில், 'கூறுதல்' என்பதும் குற்றமாம். ஆகையால் பழஞ்சுவடி கொண்டு பரிசோதித்து இப்பகுதியின் உண்மைப்பாடம் உணரத்தக்கது.

என்னிடமுள்ள பழையபிரதியில் "விளிகொள்வதன்கண் விளியோடு எட்டுவகைப்படும் வேற்றுமை." என முதல் வாக்கியமும் அதனை அடுத்து, "விளிகோள்வதென்பது பெயர்; அதன்கண் விளி என்றவாறு" என இரண்டாம் வாக்கியமும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன.

இங்கு முதல் வாக்கியம் 'வேற்றுமை' என்னுஞ்சொல் வெளிப்படத்தோன்றுவதாற் குற்றமின்றி விளங்குகின்றது. இரண்டாம் வாக்கியத்தில் அச்சுப்பிரதியிற்போலன்றி, முற்பாதி வேற்றுமை என்னுஞ்சொல் ஒழிய நிற்பதாலும், பிற்பாதி 'பெயர்; அதன்கண் விளி' எனப் பிரிந்திசைப்பதாலும் பொருள் நன்குணரக்கிடக்கின்றது.

முதல் வாக்கியத்தில் 'எட்டுவகைப்படும் வேற்றுமை' என்றதை வேற்றுமை எட்டுவகைப்படும் என்று மாற்றிக்கொள்ளவேண்டும். இங்ஙனமன்றி வேற்றுமை என்னும் எழுவாய் வேண்டாதே வாக்கியம் முற்றிநிற்பதாக மயங்கி, 'எட்டுவகைப்படும்' என்றதன் பின்னர் 'என்றவாறு' என்னுஞ்சொல்லைக் கூட்டிமுடித்தது பிரதிசெய்தோர் செய்த பிழை. இவ்வாக்கியத்திறுதிக் குறைச்சொல்லான 'வேற்றுமை' என்பதை அடுத்தவாக்கியத் தொடக்கத்தில் இடனன்றிச் சேர்த்ததும் குற்றத்தை மிகைப்படுத்திற்று. இம்மட்டினமையாது அச்சுப்பதிப்பில் இவற்றினிடையே பத்திபிரித்துவிட்டமை இப்பிளவினைப் பெரிதாகச்செய்து மாணாக்கரை இடருறுத்தாநின்றது.

இரண்டாம் வாக்கியம், சூத்திரத்திலுள்ள 'விளிகொள்வதன்கண் விளி' என்பதன் விவரணமாய் அமைந்தது. அதனுள், பொருள் விளங்காத பகுதியான 'விளிகொள்வது' என்பதைமட்டில் 'பெயர்' என்று இங்ஙனம் விளக்கி, அதனோடு நன்கு விளங்கும் எஞ்சியபகுதியான 'அதன்கண் விளி' என்பதையுங்கூட்டிமுடித்து, இவ்வுரைக்குறிப்பு வரையப்பெற்றதென்று கொள்ளவேண்டும். ஆகையால், 'பெயர்; அதன்கண் விளி' என்று வேறுவேறு பிரிந்துநிற்றற்குரியவற்றைச் சந்திகூட்டி அச்சிற் பதித்ததும் பிழையுடையதாயிற்று. இது நிற்க.

'விளித்தல் என்பது கூறுதல்' என்று அச்சுப்பிரதியிற் காணும் மூன்றாம் வாக்கியத்திலும் குற்றமுண்மை வெளிப்படை. ஆகையால் 'தொல்காப்பியச்சொல்லதிகாரக்குறிப்பு' என்னும் புத்தகத்தில் (பக். 72) அதன் ஆசிரியரவர்களால் விளித்தல் என்பது கூவுதல் என அது நன்கு திருத்தப்பெற்றுவிட்டது.



பரிசோதனம் 12. (வேற்றுமையியல் 7.) "எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி, அவ்விய னிலையல் செவ்வி தென்ப" என்பது சூத்திரம். பயனிலைகொள்ளநிற்றலும் உருபேற்கநிற்றலும் பெயர்ச்சொற்கெல்லாம் பொதுவிலக்கணம்; ஆயினும் ஒரோபெயர் உருபேற்றலிற் றிரியும்; பயனிலை கோடலிற் றிரிவன இல; ஆகையால், பயனிலைகொள்ள நிற்றற்றன்மை எவ்வகைப்பெயர்க்கும் மிகச் செவ்விதாய இலக்கணமாம்: என்பது இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர் கொண்ட பொருள்.

இப்பொருளைக்கூறும் உரைப்பகுதியில், 'எல்லாப் பெயரும்' என்றது எவ்வகைப்பட்ட பெயர்ச்சொல்லும் என்றவாறு. 'பயனிலைப்படநிற்றற்றன்மையிற் றிரியாமை' என்றது, உருபேற்க நிற்றற்றன்மையிற் பிறழ்ச்சியுடையவாய்த் திரிவதுபோலன்றிப் பயனிலைகொள்ளநிற்றற்றன்மையிற் றிரியாமை என்றவாறு. 'அதற்குச் செவ்விது' என்றது அப் பெயர்ச்சொல்லுக்குரிய செவ்விதாய இலக்கணமாம் என்றவாறு. 'பிறிது' என்றது பயனிலைகொள்ளநிற்றற்றன்மையல்லாத உருபேற்கநிற்றற்றன்மை என்றவாறு. 'அதற்குச் செவ்விதாகாமையும் உடையது' என்றது அப்பெயர்ச்சொல்லுக்குச் செவ்விய இலக்கணமாகாமையும் உடைத்து என்றவாறு. நீயிர் என்பதுபோன்ற சில பெயர்கள் உருபேற்றற்றன்மை உடையனவல்ல. ஆகையால் அவ்விலக்கணத்தில் அவை திரிபுடையன. ஆயினும் பயனிலைகொள்ளநிற்றற்றன்மையில் அங்ஙனம் எவையும் திரிபுடையன ஆகா என்பதாம். இச்சூத்திரத்தில் 'அவ்வியல்' என்றது இதற்குமுற்பட்ட சூத்திரத்திலுள்ள பயனிலைகோடற்றன்மையைச் சுட்டியதென்பதும், 'நிலையல்' என்றது அத்தன்மையிற் றிரியாது நிலைபெறுதலைக் குறித்ததென்பதும் உரையாசிரியர் கருத்து. இஃது இங்ஙனமாகவும் 'தொல்காப்பியச்சொல்லதிகாரக்குறிப்'பில் (பக். 82.) "உரையாசிரியர் அவ்வியனிலையல் என்பதற்குப் பயனிலைப்படநிற்றற்றன்மையில் திரியாமை எனப் பொருள்கூறினர். அஃதாவது பெயர் எழுவாயாயிருக்கும்போது கொண்ட உருவத்தினையே

வேற்றுமையுருபேற்கும்போதும் கொள்ளுதலும், மாறுபடாமலிருத்தலும் என்பது." என்று இளம்பூரணர் கருத்து வேறுவகையாக விரித்துரைக்கப்பட்டது. அது பொருந்துமோ என்பது ஆராய்ந்து கொள்ளற்பாற்று. இஃது ஒருபுறம் நிற்க.

சூத்திரப்பொருள் உரைத்தபிறகு, அவ்வுரையின் விவரணமாக அச்சுப்பிரதியில் இரண்டுபத்திகள் காணப்படுகின்றன. "யாதோ எனின் உருபேற்றலும் பெயாது இலக்கணம். அவ்வுருபேற்றலை உடையதாகாது எனலுமாம்." என்பது அவற்றுள் முதற்பத்தியாகும். இரண்டாம்பத்தி, "ஓரோபெயரேன்பது என்னை? நீயிரென்பது பேயர்; பேயராயினும் நீவிரை என உருபேலாது. பிறவு மன்ன" என்று உள்ளது.

இங்கு முதற்பத்தியில், 'உடையதாகாது' என்னும் வினைக்கு வினைமுதல் தெளிவாய் விளங்காதது ஒரு குறை. இரண்டாம்பத்தியில், ஓரோபெயரென்பது என்னை' என்று முன்னைய வாக்கியத்தோடு யாதோரியைபுமின்றித் தொடங்கியிருப்பதும் பொருட்பேறின்றிக் குற்றமுடையதாம். ஆகையால் இவ்விசேடவுரைப்பகுதியும் பழைய பிரதிகொண்டு பரிசோதிக்கத்தக்கதே.

அப்பிரதியில் இது இருவேறுபத்தியாக அன்றி, ஒருசேரத்திருத்தமாய் எழுதப்பட்டுள்ளது. அது, "யாதோஎனின் உருபேற்றலும் பெயாது இலக்கணம். அவ்வுருபேற்றலை உடையவாகாவுமாம் ஓரோ பேயர் என்பது. என்னை? நீயிர் என்பது பேயர்; ஆயினும் நீவிரை என உருபேலாது. பிறவும் அன்ன" என்பதாம்.

இதனுள் 'உடையவாகாவுமாம்' என்னும் வினைக்குரிய 'ஓரோ பெயர்' என்னும் வினைமுதல் வெளிப்படத்தோன்றி நிற்கிறது. ஓரோ பெயர் உடையவாகாவுமாம் என மாற்றிக் கொள்ளவேண்டும். 'என்பது' என்றது இங்கு வாக்கியத்தை முடிக்கும் உரைநடைமரபான முற்றுச் சொல். ஓரோபெயர் என்பது சிலபெயர் என்னும் பொருட்டாகலின் அது ஆகாவுமாம் என்னும் பன்மைவினை ஏற்றது.



இங்ஙனம் வினைமுன்னும் வினைமுதல் பின்னுமாக மாறிநிற்பதனை அறியாது மயங்கி இரண்டற்குமிடையே எழுத்தாளர் வாக்கியப் பிரிவினை வகுத்திட்டனர் போலும். 'ஆகாது எனலுமாம்' என்ற பிழைப் பாடமும் அக்காரணத்தினானே சேர்ந்திருக்கலாமென்று தெரிகிறது. ஆகையால் அவ்விடையே பத்திபிரித்திருப்பதும் அச்சுப்பதிப்பின் பெருங்குற்றமென்று களையத்தக்கது.

'ஓரோபெயர் என்பது' என்னுஞ் சொற்றொடர் முன்னைய வாக்கியத்தின் இன்றியமையாத குறையாகையால், பின்னைய வாக்கியத்தில் அஃது ஒழிய நிற்பது ஏற்புடையதே. முன்னைய வாக்கியப்பொருள் முழுவதையும் ஆசங்கிப்பதால் பின்னைய வாக்கியம் 'என்னை' என்றமட்டில் தோற்றுவாய்கொண்டு எழுந்து விடையிறுப்பதும் நன்கு பொருந்துகின்றது. அன்றியும் அதனுள் 'நீயிர் என்பது பெயர்; ஆயினும்' என்று காணப்படும் சுத்தபாடமும், 'நீயிர் என்பது பெயர்; பெயராயினும்' என்று பெயரென்னுஞ்சொல் இருமுறைமடித்துவரும் அச்சுப் பிரதியின் பாடத்தினும் ஒருவாறு சிறப்புடைத்தாம்.

பரிசோதனம் 13. (வேற்றுமையியல் 9) "பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா, தொழினிலை யொட்டு மொன்றலங் கடையே" என்பது சூத்திரம். 'பெயர்ச்சொற் காலந்தோன்றா; தொழிற்பெயராயிற் காலந் தோன்றும்' என்று இளம்பூரணர் இதற்குப் பொருளுரைத்தனர்.

இதன் வரலாறு கூறும் பகுதி, அச்சுப்புத்தகத்தில், "சாத்தன் என்பது காலந்தோன்றாது; உண்டான் என்பது காலந்தோன்றிற்று. மற்றுத் தொழிற்பெயரெல்லாங் காலந் தோன்றும்" என்று முடிக்கப்பட்டு, அதன்பின்னர் தனியே வேறுபத்தியாக, "அற்றன்று பெயர்ச்சொற் காலந்தோன்றா எனவே தொழிற்பெயர் காலந்தோன்றுதலுந் தோன்றாமையும் உடைய என்பதாம்." என்று அச்சிடப்பட்டுள்ளது.

இங்கு வரலாற்றின்பின்னுள்ள இருவாக்கியங்களினும் முன்னதன் பொருளைப் பின்னது மறுத்துரைக்கின்றமையால், ஒன்று தடையும் மற்றொன்று விடையுமாகவேண்டுமென்பது வெளிப்படை.

ஆகையால் அவ்விபையினைப் புலப்படுக்குஞ்சொல் இடையே விழுந் தொழியவிட்டதே யன்றி, அவற்றை வேறு வேறு பத்தியாகவும் பிரிவு படுத்தியது அச்சுப்பதிப்பின் தவறேயாகும்.

இத்தவற்றினை உய்த்துணர்ந்து 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்'பில் (பக். 85 அடிக்குறிப்பு) "அற்றன்று என்பதற்கு முன் 'எனின்' என்ற சொல் இருப்பின் அந்நுவயித்துப் பொருள்தரும்." என்று அதன் ஆசிரியரவர்கள் எழுதியுள்ளார்கள். இங்ஙனம் உய்த்துணரவேண்டாது, பழையபிரதியில் "மற்றுத் தொழிற்பெயரெல்லாங் காலங்தோன்றும்பிறவெனின்; அற்றன்று, பெயர்ச்சொற் காலந் தோன்றா எனவே தொழிற்பெயர் காலந்தோன்றுதலுந் தோன்றாமையும் உடைய என்பதாம்". என்று தடையும் விடையுமாய அவ் விருவாக்கியங் களும் ஒன்றற்கொன்று தொடர்புடையவாகத் திருத்தமாய் வரையப்பட்டுள்ளன.

[தொடரும்.]

T. N. அப்பனையங்கார்,
தலைமைத்தமிழாசிரியர்,
இராமேசுவரதேவஸ்தானம் பாடசாலை,
மதுரை.

---



௨

# *சித்தசுத்தி.

(மனத்தூய்மை.)

V. S. இராமஸ்வாமி சாஸ்திரிகள், B.A., B.L. அர்வகள் எழுதுவது.

சித்தசுத்தியே ஹிந்து தருமத்தின் சாரமாகும். ஹிந்து தருமத்தின் உண்மையான மருமத்தைத் தெரிந்துகொள்ள எவர்கள் விருப்பமுள்ளவர்களோ, அவர்கள் இந்த சித்தசுத்தியென்ற தத்துவத்தை நன்றுயறிந்துகொள்ளவேண்டும். ஹிந்து தருமத்திலுள்ள வேறுதத்துவங்கள் இதைப்போல் உயர்ந்தனவல்ல. ஸகுண உபாஸனையோ, நிர்க்குண உபாஸனையோ, ஈசுவரன் ஒருவனே என்றவாதமோ, தேவர்கள் பலர் இருக்கிறார்கள் என்று அவர்களிடம் பக்தியோ, துவைதவாதமோ அல்லது அத்துவைதவாதமோ, ஞானவாதமோ அல்லது கருமவாதமோ, பத்திவாதமோ, இந்தக் கொள்கைகளெல்லாம், சித்தசுத்தியுடன் சேராதாகின், பிரயோசனமற்றவையாகும். சித்தசுத்தியிருந்தால் எல்லாமதங்களும் தூய்மையுள்ளனவாகும். எவைகளில் சித்தசுத்தியில்லையோ, அவைகள் அசுத்தமானவைகளே.

சித்தசுத்தியென்பது ஹிந்துதர்மத்தின் மட்டும் ஸாரமென்பதில்லை; அது எல்லாமதங்களுடையவும் ஸாரமாகும். எவனுக்குச் சித்தசுத்தியிருக்கிறதோ, அவனே சிறந்த ஹிந்து, சிறந்த கிறிஸ்தவன், உயர்ந்த பௌத்தன், மேலான முஸல்மான். எவனுக்குச் சித்தசுத்தியில்லையோ, அவன் எந்த மதவாதிகளுக்குள்ளும் தார்மிகன் என்று கருதப்படமாட்டான். தருமமென்பது சித்தசுத்தியே. ஆனாலும் ஹிந்து தருமத்திலேயே சித்தசுத்தி பெலம்வாய்ந்தது. எவனுக்குச் சித்தசுத்தியில்லையோ, அவன் உண்மையான ஹிந்துவல்ல. தர்மசாஸ்திரங்களில் விதித்திருக்கிறபடியே எல்லாக் கருமங்களையும் அனுஷ்டானம் செய்தாலும் ஒருவன் சித்தசுத்தியில்லாமல் ஹிந்துவாகமாட்டான்.

---

* சிலவருஷங்களுக்குமுன் வங்கதேசத்தில் விளங்கினவரும், சிறந்த பண்டிதரும், உத்தமமானகவியுமான ஸ்ரீமாந். பாபு வங்கிமசந்திரசட்டோபாத்தியாயரவர்களின் வியாஸத்தின் தமிழ்மொழிபெயர்ப்பாகும்.

சித்தசுத்தியென்பதியாது என்பதை இரண்டு உதாரணங்கள் மூலமாய்த் தெரிவிப்பாம். சித்தசுத்தியின் முதலாவது இலக்கணம், இந்திரியங்களை அடக்குதலேயாம். இந்திரியஸம்யமமென்பதால், எல்லா இந்திரியங்களையும் ஒரேபடியாய்த் தொலைப்பது என்று கருதக்கூடாது.

உதாரணமாக, வயிறுவளர்ப்பதென்பது ஒருவிதமாக இந்திரியத்தின் வசப்படுதலே. இந்திரியத்தையடக்குதல் என்பதற்கு, வயிற்றை யொடுக்கி வாயுபக்ஷணம் செய்யவேண்டுமென்று பொருளில்லை; அல்லது எப்படியாவது வயிற்றை நிரப்பவேண்டுமென்று நிஷித்தமான ஆகாரத்தை உட்கொள்ளவேண்டும் என்று தாத்பரியமும் இல்லை சரீரத்தைக் காக்கவும், தேகசௌக்யத்துக்காகவும், எந்த அளவில், எவ்விதமான உணவைப் புசிக்கவேண்டுமோ, அதை அவசியம் உண்டுதீரவேண்டும். அதனால் இந்திரியஸம்யமத்துக்கு ஒருகுறைவும் ஏற்படாது. இந்திரியங்களை அடக்கினவர்களாலும், உத்தமமான உணவு, அதிகமான அவாவில்லாமல் எடுத்துக்கொள்ளக்கூடியதே.

பகவத்கீதை 2-வது அத்தியாயம் ௬௪-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறதாவது:—ராகத்துவேஷங்களற்றவனான ஒருவன், தன் வசப்பட்டவைகளான இந்திரியங்களின்மூலமாக எல்லாப்பொருள்களையும் அநுபவித்தாலும், மனதையடக்கியவனாகையால், அவன் தெளிவையே அடைகிறான். இந்திரியங்களில் பற்றுவையாதிருப்பதே, இந்திரியஸம்யமமாகும். தருமத்தைக் காப்பதற்காகவும், அல்லது ஈசுவரனது நியமத்தைக் காப்பதற்காகவும், எவ்வளவுமட்டில் இந்திரியங்களைத் திருப்திசெய்தல் ஆவசியகமோ, அதைக்காட்டிலும் அதிகமாக இந்திரிய திருப்தியில் ஆசைவைப்பானானால், அவனுக்கு இந்திரியஸம்யமம் என்பது ஏற்படாது. இந்திரியங்களைத் திருப்திசெய்வதில் எவனுக்கு இன்பவுணர்ச்சி இல்லையோ, தருமத்தை விட்டுவிடாமல் எவன் காத்துக்கொண்டிருக்கிறானோ, அவனுக்கு இந்திரியங்கள் வசப்பட்டனவாகும். இந்திரிய சுகத்தை வெறுத்தவர்களாயும், ஆனால் மனதின் கசட்டை அகற்றாதவர்களுமாக பலர் காணப்படுகிறார்கள். ஜனங்களிடத்து வெட்கத்



தாலோ, அல்லது உலகத்தார் தன்னைப் புகழவேண்டுமென்ற வேட்கையாலோ, தருமம்செய்கிறவர்களாகத் தங்களைப் பாவித்துக்கொண்டு, இந்திரியங்களை அடக்கினவர்கள்போல் நடித்துக்கொண்டிருந்தாலும், அவர்களது மனதில் இந்திரியசுகங்களில் ஆசை மிகவதிகம். பிறவி முதல் சாகும்வரை அவர்கள் ஒழுக்கம்தவறாதவர்களாயிருந்தாலும், அவர்களுக்கும் இந்திரியஸம்யமத்துக்கும் வெகுதூரம். எவர்கள் அடிக்கடி இந்திரியசுகத்தையே நாடுகிறார்களோ, அதையடைவதற்கு முயற்சி செய்கிறார்களோ, அவர்கள் இவ்வுலகத்திலேயே நரகாக்கினியால் வெதுப்பப்படுகிறார்கள். இந்திரியங்களைத் திருப்திசெய்தாலும் செய்யாவிட்டாலும், எவனது மனதில் பிரமத்தினாலாவது இந்திரியதிருப்தியில் ஆசையே கிடையாதோ, எவனுக்கு, இந்திரியதிருப்தியால் துக்கமே விளையும் என்ற நினைவு இருக்கிறதோ, அவனுக்கே இந்திரியஸம்யமம் சித்தியாகும். அவ்வாறின்றேல் யோகாப்யாசமும், தவம்புரிதலும் வீணேயாகும். இவ்விஷயத்தைத் தெளிவாயறிவிப்பவைகளான முனிவர்களின் விருத்தாந்தங்கள் புராணங்களிலும் இதிகாசங்களிலும் அநேகங் காணக் கிடைக்கின்றன. சுவர்க்கத்திலிருந்து அநேக அப்ஸரஸ் கூட்டங்கள் வந்தனவென்றும், அவைகளைக்கண்டு முனிவர்களின் தவத்துக்குத் தடை நேர்ந்ததென்றும், அவர்கள் பொய்யாகவே மறுபடியும் யோகாப்பியாஸம் செய்யத் தொடங்கினார்களென்றும் கதைகள் இருக்கின்றன. இவைகளிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், தவத்தாலும், யோகாப்பியாஸத்தாலும், நம்மால் இந்திரியங்களை அடக்கவியலாதென்பதே.

காரியங்களையெல்லாம் நடத்திக்கொண்டும், ஸம்ஸாரத்திலிருந்துகொண்டும், இந்திரியவின்பங்களில் விருப்பமில்லாமலிருப்போமானால், நம்மால் இந்திரியங்களையடக்குதல் கூடும். கானகத்தில் வசித்துக்கொண்டும், இந்திரியவிருத்திகளைத் தூண்டக்கூடிய பொருள்களைத் தூரத்தில் விலக்கியும் இருக்கிற ஒருவன், இந்திரியங்களையடக்கினவனாக மனதில் நினைத்துக்கொள்ளலாம். அக்கினியில் சுடப்படாத மண்பாண்டம் கையால் தொடப்பட்டாற் சிதறிவிடும். அதுபோல் மனத்தூய்மையால் உறுதிப்படாத இந்திரியஸம்யமமும், உலோபத்

தால் தொடப்பட்டமாத்திரத்தில் நிலைகுலையும். இந்திரியங்களைக் கவரக்கூடிய பொருள்களின் நடுவில் எவனொருவன் இருந்துகொண்டு, இந்திரியங்களுடன் போர்புரிந்து ஒருசமயத்தில் அவைகளை வென்றும், மறுசமயத்தில் அவைகளால் வெல்லப்பட்டும் கடைசியில் அவனே வெற்றியடைவானோ, அவனுக்கு இந்திரியஸம்யமம் கைகூடும். விசுவாமித்திரராலும் பராசரராலுமே இந்திரியங்களை வெல்லக் கூடவில்லை. பீஷ்மரும், லக்ஷ்மணரும்தான் இந்திரியங்களை வென்றவர்கள். ஹிந்துதருமத்தின் இரகசியமான ஒரு கதையை உரைத்தோம். இந்திரியஜயத்தையும் சித்தசுத்தியையும் ஒப்பிட்டுப்பார்த்தால், பின்சொன்னதே மேலானது. இந்திரியங்களை வென்றவர்கள் அநேகர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களது சித்தம், பலவேறுகாரணங்களால் தூய்மையடையவில்லை. தாங்களே நன்றாயிருக்கவேண்டும், தாங்களே மேன்மையடையவேண்டும் என்ற வாஸனையே அவர்கள்மனதில் பெலமுள்ளதாயிருக்கிறது. நாமே பணக்காரராய் இருக்கவேண்டும், நமக்கே மரியாதை கிடைக்கவேண்டும், மற்றவர்கள் எல்லோரும் நமக்குக் கீழ்ப்பட்டவர்களாயிருக்கவேண்டும், நமக்கே புகழ் வரவேண்டும் என்று அவர்கள் மனதில் விருப்பத்தைச் செய்துகொண்டே இருக்கிறார்கள். இந்த விருப்பங்கள் எல்லாம் எவர்களுக்கு நிறைவேறியிருக்கின்றனவோ, அவர்களும் இவ்விதமான எண்ணங்களை மேன்மேலும் எண்ணிக்கொண்டே இருக்கிறார்கள்; அவர்கள் இவ்விதமான எண்ணங்களை எண்ணாத சமயமே கிடையாது. இந்திரியசுகங்களில் ஈடுபட்டவர்களைக்காட்டிலும், அவைகளையே மனதில் பாவனைசெய்துகொண்டிருப்பவர்கள் கீழ்ப்பட்டவர்களே. இவர்களிடம் கொஞ்சமாவது தருமமில்லை, கருமமில்லை, ஞானமுமில்லை, பக்தியுமில்லை. அவர்கள் தங்களை இறைவனென்றே நினைக்கிறார்கள். அவர்களது நினைவில் உலகத்தில் தங்களைத்தவிர வேறொன்றும் இல்லையென்றிருக்கிறது. இந்திரியங்களிலீடுபடுவதைக்காட்டிலும், இவ்விதமாகத் தன்னலம்பாராட்டுவதே, சித்தசுத்திக்கு அதிகமான தடையைத் தரக்கூடியது. தன்னைப்போலவே பிறரையும் பாவிக்கிறவனுக்கே சித்தசுத்தி உண்டாகும்.

(தொடரும்.)

---

உ

# காலம்.

வேலூர் S. M. D. H. ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
K. S. விஸ்வநாதசாஸ்த்ரி வித்வான்., P. O. L. அவர்கள் எழுதுவது.

உலகெலாந் தோன்றியொடுங்குதற் கிடமாயதும், இறைவனென முதலும் முடிவுங் காணப்படாததும், இறப்பு நிகழ்வு எதிர்வென்னும் வழக்கினுக்கேதுவாயதும், பாகுபாடென்பதொன்றுமே தன்னகத்திலதாயினும் உலகம் வழங்கிவருவதற்கே நாளென்றும் வாரமென்றும் மாதமென்றும் பருவமென்றும் யாண்டென்றும் மாந்தரால் வரையறுத்து வழங்கப்பெறுவதுமாகிய இயல்பினையுடையது காலமாகும். அக்காலந்தான் நிகழ்ந்தது நிகழ்கின்றது என்பதுமுதலாய வழக்கிற் கிடமாகி அத்தொடர்புபற்றியே எப்பொருட்குமிடமாகிய ஓர் முடிவற்ற பொருளாகின்றது. அது பாகுபாடொன்றுந் தன்னிடத்திற் பெற்றிலதேனும் நாள் முதலிய பகுப்பிற்குரியதாக நாம் வழங்குமாறு தோற்றிநிற்பது "நாளென வொன்றுபோற் காட்டி" என்ற திருவள்ளுவனாரது வாக்கிற்கிணங்க வெறுந்தோற்றமேயாம்.

ஆயினும் உலகவழக்கியங்குதற்கே நாம் அவ்வாறு பகுத்துக்கொண்டுளேமென்பதே கருதற்பாலதாம். நம்முடைய இப்பாகுபாட்டிற்குத் துணைசெய்வன ஞாயிறும் மதியும் ஆதிய வொளிகளும் உலகியற்பொருள்களின் ஆக்கம் முதலாய மாறுபாடுகளுமேயாம். இப்பாகுபாடுதான் மாந்தரது நாகரிகவளர்ச்சிக்கும் அவரது பழக்கவழக்கங்களுக்கும் அவர்வாழுமிடத்திற்குந் தக்கவாறு அவ்வப்பொழுது சிறுசிறு மாறுதலைப்பெற்றே வளருமென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இத்தகைய காலப்பாகுபாட்டிற் பெரும்பாலும் மாந்தரனைவரும் ஒருமித்தகருத்தினராகவே காண்கின்றனர். இயற்கையும் அவ்வாறே அமையுமாறு தூண்டுகின்றது. அந்தந்த மொழிகளிலுமுள்ள குறியீடுகளும் இதனை வெளியிடுகின்றன. இவ்வியல்பினை நாம் நமது தொன்னூல்களிற் காணப்பெறும் நம்முன்னோரது பழக்கவழக்கங்களிலிருந்துந் தற்காலத்திலுள்ள நமது வழக்கிலிருந்தும் ஒருவாறு நன்கு உணரலாம்.

இப்பொருளைபற்றி நாம் ஆராய்ந்தறிவதும் வருங்கால வளர்ச்சிக்கொரு துணையாகுமென்பது கருதியே ஆராய்ச்சியாளரின் நன்மனத்திற்கோர் சிறு விருந்து ஈண்டளிக்கப்பெறுகின்றது.

தமிழர்களின்காலப்பாகுபாடு: காலம்பற்றி ஆராயப்புகுகின்ற நமக்கு இன்றியமையாத்துணையாவது ஒன்று உண்டு. அத்துணைதான் யாதெனின் பழந்தமிழ்மக்கள் செய்துகொண்ட காலப்பாகுபாடுபற்றிச் சிறிதளவேனும் நா முணர்ந்துகொள்வதாகும். அவ்வாறு நாமுணர்ந்து கொள்ளவேண்டுமிடத்து மிகத்தொன்மையதும் இடைச்சங்கநூலெனப்படுவதுமாய தொல்காப்பியமும், கடைச்சங்கநூல்களாய பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண்கீழ்க்கணக்கும், ஐம்பெருங்காப்பியங்களாய சிலப்பதிகாரம் முதலியனவும் காண்போமாயின் அதனை எளிதிற்பெறுவோம். அத்தமிழ்மக்கள் செய்துகொண்ட பாகுபாடுதான் என்னையெனின், அவர்தாம் வாழுமிடமாய நிலத்தை நான்குவகையாகப் பகுத்து அவற்றிற்குக் குறிஞ்சிமுதலாய பெபரும் தந்து வழங்கினர். அம்மக்கள் மலையும் மலைசார்ந்தவிடமும் குறிஞ்சியென்றும் காடும் காடு சார்ந்தவிடமும் முல்லையென்றும் நகரும் நகர்சார்ந்தவிடமும் மருதமென்றும் கடலும் கடல்சார்ந்தவிடமும் நெய்தலென்றும் குறித்து வழங்கினர். இந்நான்குவகை நிலங்களினுள்ளும் ஏதேனுமொன்று தன்னியல்பிற் குன்றுமாயின் அதனைப் பாலையென்றனர்.

இவ்விதமே அவர் தங்கள் ஒழுக்கத்தையும் அகம் புறமென விருபாற்படுத்தி இன்பம்பற்றிய ஒழுக்கமெல்லாம் அகத்திணை (திணை-ஒழுக்கம்) எனவும், அறம் முதலியனபற்றிய ஒழுக்கமெல்லாம் புறத்திணையெனவும் வகுத்திருந்தனர். ஆதலின் அறம் பொருள் இன்பம் வீடெனு முறுதிப் பொருள் நான்கினையும் அவர் அகப்பொருள் புறப்பொருள் என்றிருவகையினுள்ளேயே அடக்கிக்கொண்டனர் என்பதாயிற்று. அவரதிவ் வொழுக்கங்களி னிலக்கணங்களைக் கூறும் பகுதிக்குப் பொருளிலக்கணமென்றுபெயர். அப்பொருளிலக்கணந்தான் அகப்பொருளை ஐந்திணை முதலாகவும் புறப்பொருளை வெட்சித்திணை முதலாகவும் விரித்துரைக்குமிடத்து முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருளென அவ்வைந்திணையை மூன்றுவகைப் படுத்தியது. அவைகளுள் முதற்பொருளெனப்படுவது நிலமும் பொழுதுமாம். நிலத்தின் வகையெல்லாம் முன்னர் உரைக்கப்பெற்றன. பொழுதினையுமவ்வாறே சிறுபொழுதென்றும் பெரும்பொழுதென்றும் இருபாற்படுத்துகின்றது. சிறுபொழுதென்பன நாளின் உட்பிரிவுகளாகவும் பெரும்பொழுதென்பன யாண்டின் பகுதிகளாகவும் மதிக்கப்பெறுகின்றன. இப்பொழுதுகளைத் தொகுத்துரைக்கும் நாற்கவிராசநம்பியும்,



மாலை யாமம் வைகறை எற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்
(நம்பிஅக-அகத்-12) என்றனர்.

எனவே சிறுபொழுதுதான் மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகலென்றைந்தாகுமென்று கூறியதாயிற்று. எற்பாடென்று மற்றுமொன்று சேர்த்துச் சிறுபொழுது ஆறு என்றும் உரைப்பார் பலர். இதனால் அறுபது நாழிகையுள்ள ஒருநாளை ஆறுபிரிவுசெய்து ஒவ்வொரு பிரிவும் பப்பத்துநாழிகையாக ஒவ்வொன்றையும் முறையே மாலைமுதலிய பெயர்களாற்றமிழர் வழங்கிவந்தனரென்பது தெளிவாகும்.

இவ்வாறே பெரும்பொழுதையும் கார்முதலாக ஆறுபருவங்களாகப் பகுத்திருந்தனர் என்பதும்

காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றாங்
கிருமூன் றிறுத்தது தெரிபெரும் பொழுதே
(நம்பிஅக-அக-11)

என்ற நாற்கவிராசரின் மொழியாலும் உணரலாம். ஆகவே ஒரு யாண்டின் இயற்கைத் தோற்றவழிவுகளை ஆறுபாகுபாடுசெய்து ஒவ்வொன்றின் இயல்பிற்குத்தக்கவாறு கார்முதலிய பெயர்களையும் அமைத்துக்கொண்டனர் என்பதும் ஈண்டு உணர்தற்பாலதாம்.

இப்பாகுபாடுகளேயன்றி மாதமென்னும் பிரிவினையும் அக்காலத்திருந்ததெனினும், அம்மாத மென்னும் குறியீட்டாற் காலத்தைக் குறிப்பிடுவது மிகவருகியே காண்கின்றது. அன்றியும் அகப்பொருள் பற்றிய காலப்பாகுபாட்டைக் காண்போமாயின் பண்டைத்தமிழ்மக்கள் பெரும்பொழுதைப் பெரும்பாலும் பருவங்குறித்தே வழங்கினார்களென்பது தெளிவாகும். மாதப்பாகுபாட்டாற் குறிப்பிடுவதும் உண்டெனினும் மிகவருகியதே என்பது மாதமென்ற தலைப்பின்கீழ் விளக்கப்பெறும். ஈண்டு காணப்படுபவைகளான நாள் நாழிகை மாதம் பருவம் யாண்டு என்பனபோலவே வாரம் என்று மிக்காலத்து வழக்கிலொன்றுளது. இது பழமையானதாகக் காணப்படவில்லையாயினும் புதியன புகுதல் என்பதற்கோர் இலக்கமாவதை வாரமென்னும் பகுதியிற் காண்போம். மற்றும் ஊழி முதலியனவும் வழக்கிலுண்டேனும் அவை ஆராய்ச்சியிற் றனிப்பட்டவோரிடம் பெறுதற்குரியனவாம் என்பது

கருதி அவை ஈண்டுக் கழிக்கப்பெற்றன. இனிக் காலத்தின் பகுதிகளாகக்கருதப்பட்ட நாள்முதலியவற்றினியல்பைச் சிறிதாராய்வோம்.

### நாள்

நாளென்பதோரிரவும்பகலுங்கூடிய ஓர் காலப்பகுதியேயென்பதும் நாமறியாததொன்றன்று. இப்பொழுது நாமவ்விதமே வழங்கிக் கொண்டுமிருக்கின்றோம். அதாவது கதிரவனது தோற்றம் ஒன்று தொடங்கி அவன் மறைந்து மற்றொருமுறை தோன்றும்வரையில் நாம் ஒருநாளென்று கணக்கிடுகிறோம். ஆனால் ஞாயிறு தோன்றுங்காலமே நாளின் தோற்றுவாயாக நாடோறும் கொள்ளப்படினும் ஆங்கில நாடுபோன்ற பல்வேறுநாடுகளிலும் அக்கதிரவன்தோன்றும் காலவேறுபாட்டைத்தழுவி நாளின் தொடக்கமும் வேறாகுமென்ற வேற்றுமை மட்டுங் கருதற்பாலதாம். தற்காலத்திய நாட்கணக்கில் அவ்வாங்கில நாட்டவர் தலைக்குநேராகக் கதிரவன் வருவதற்குமுன்பு முப்பதுநாழிகையும் பின்பு முப்பதுநாழிகையுமாக அறுபதுநாழிகைகூடிய ஒரு காலத்தினை ஒரு நாளென்கின்றனர். அவர் இரவு பதினைந்துநாழிகை (பன்னிரண்டுமணி) யானதும் அடுத்தநாளாகக் கணக்கிடுகின்றனர். இதனை நாம்புகைவண்டிநிலையம் முதலான இடங்களிற் காண்கின்றோம். இத்தகைய முறையொன்று நமது நாட்டிலுமிருக்கின்றது. பிறப்பிறப்பு பெண்களின்பூப்பு முதலாயவிடங்களில் வாலாமைநீக்குதல் முதலிய சடங்குகளெல்லாங் கழிக்குமிடத்து நாம் இரவு பதினேழரைநாழிகைக்கு (ஒருமணிக்கு) மேற்பட்டவைகளை எல்லாம் அடுத்தநாளில் நிகழ்ந்தனவாகவே கணக்கிடுகிறோம். ஆனால் அவர் மெரிடின் என்பதுக்கு முன்னும் பின்னுமாக (A. M = Anlemeri diem. p. M = post meridiem முப்பது முப்பதுநாழிகை (பன்னிரண்டு பன்னிரண்டு மணி) கொண்டு அறுபதுநாழிகை இருபத்துநான்குமணிநேரம் ஒரு நாளென்பதனாலிரவு பன்னிரண்டுமணி முடிந்ததும் அடுத்தநாளாரம்பமாகின்றது. நமக்கத்தகையகாரணமொன்றுமின்றி இரண்டு சந்திகளிலும் இரண்டு முன்றேமுக்கால்நாழிகைகள் அதாவது ஏழரைநாழிகைபோகமிருந்துள்ள இரவை ஐந்தாக்கி அவற்றில் மூன்றுபாகம் முதல் நாளைச்சேர்ந்ததாகக் கொள்கிறோம். இக்கணக்கில் இரவு பதினேழரைநாழிகை அதாவது ஒருமணி முடிந்ததும் அடுத்தநாளாகக் கொள்கின்றோம். இவ்வளவே இருவருக்கும் வேற்றுமை. இனிநாளென்னுஞ் சொற்பொருள் தேடுமிடத்து நாள் என்பது காலை, நக்ஷத்திரம், தேதி, ஓரிரவு பகல், காலம் என்ற பலபொருள்களையுங் குறிப்பதாகக் காணப்படுகின்றது.



“நாண்மோர் மாறும்” (பெரும்பாண். 160) “நாண்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்” (களவழி. 1) என்றவிடங்களில் காலையிலே மோர் மாறுகின்ற என்றும் காலைப்பொழுதிலே வந்தடைந்தபோரிலே பட்டவா என்றும் உரையாசிரியர்கள் உரைசெய்வதும் “நாண்மகிழிருக்கை” (புறம். 29) “செம்மல் நாளவை யண்ணாந்து புகுதல்” (புறம். 54) “நாள்ஆ தந்து நறவுநொடை தொலைச்சி” (பெரும்பாண். 160) நாளிருக்கை நாண்மலர் என்று பழந்தமிழ்க்கவிகள் வழங்கியிருப்பதும் நாளென்றசொற்குக் காலையென்னும் பொருளுண்மை தெரிக்கும்.

மற்று “நாளுங் கோளுந் தன்னகத் தடக்கி” (மணிமே. ஆபு. 42) என்பதுபோன்ற பிரயோகங்களும், “வியன் நாண்மீன் நெறியொழுக” (மதுரைக்கா. 6) “நாண்மீன் விராய கோண்மீன் போல” (பட்டினப். 67) என்பவைகளும் நாளென்னுஞ்சொற்கு நக்ஷத்திரமென்ற பொருளுண்மையை உரைக்கும். நச்சினார்க்கினியாரும் தமது தொல்காப்பிய உரையில் “இது நாண்மீனின்பெயர் நாளிற்குப் பெயராயினாற்போல்வதோர் ஆகுபெயர்” என்றிருப்பதும் நக்ஷத்திரமென்பதற்கே நாளென்றுவழங்குஞ் சேரநாட்டினரின் வழக்கும் இதனைத் தெளிவாக்கும்.

“நாளு நவைபோகான் கற்றன் மிகவினிதே” (இனிதுநா. 4.)

“என்று முளவாக நாளு மிருசுடரும்” (நான்மணி. 60) என்பன போன்ற தொடர்களும் “நாள்தோறும்” “நாணாளும்” என்று நாம் வழங்குவதும் ஓரிரவும்பகலுஞ்சேர்ந்த ஒருகாலத்தையே என்பதனை விளக்கும்.

இவையன்றிக் காலமென்று பொருளுணர்த்துமாறு பொதுப்பெயராகவும் வழங்கப்பெறுகின்றதென்பதும் “மாரிநாட்கூவுங் குயிலின் குரலின்னா” (இன்னா. 2) என்றுவரும் பிரயோகங்களாலுணரலாம்.

இவ்வகைஇய பொருள்களை உணர்த்திய நாளென்னுஞ்சொல் இப்பொழுது ஓரிரவுபகல்கூடியதொருகாலம் அல்லது பொதுவகையால் ஒருசமயம் என்றபொருள்களில் வழங்கிவருகின்றது. இதனைக் கூர்ந்தாராயுமிடத்துக் காலையென்றுணர்த்தியதே அக்காலைதொடங்கிய முழுநாளையும் உணர்த்தியதென்றே அல்லது நக்ஷத்திரம் ஒவ்வொன்றும் ஏறத்தாழ அறுபதுநாழிகைகொண்டதாகலின் அவ்வளவினதான காலத்தையும் அப்பெயரே உணர்த்தியதென்றே கொள்ளுதல்வேண்டும். வடமொழியிலும் இவ்விதமே தினமென்பது பகலையே உணர்த்துங் காரணப்

பெயரேயாயினும் பிற்காலத்திலது ஓரிரவுபகலுக்குப் பெயராக மாறியிருக்கின்றது. என்னையெனின் தினமணியென்றாற் கதிரவனென்று பொருள். அத்தினமணியென்பதும் பகலில் விளங்குபவன் என்ற காரணம்பற்றி வந்த பெயராகும். "தினே தினே சா பரிவர்த்தமாநு" என்பதுபோன்ற விடங்களில் தினே தினே என்பது நாடோறும் என்று பொருள்படுகின்றது. தினம் இருளைப்போக்கடிப்பது என்ற பெயர்க்காரணத்தையும் காண முற்கூறிய முடிவு நிலைபெறும். ஓரிரவுபகலை உணர்த்துவதாக அங்கு முதல் வழங்கியது திதி என்ற சொல்லே. அதனை நாம் தமிழில் தேதி என்கின்றோம். சோநாட்டார் தியதி என்கின்றனர். ஆங்கிலேயரும்கூட டேட் என்கின்றனர். மேலும் திங்களின் தேய்வுவளர்ச்சிகளைப் பதினைந்து நாட்களாகக் கணக்கிட்டுவைக்கக் காலாந்தரத்தில் அப்பதினைந்துநாளென்பது மாறிச் சிற்சில சமயங்களில் ஏற்றக்குறைச்சலைப்பெற்றது. பெறவே அக்காலத்தைப் பதினைந்தாகப் பங்கிடுமிடத்து ஒவ்வொருதிதியும் நியதியாக வருபது நாழிகையே பெறாமல் ஏற்றக்குறைவைப் பெறவே தினம் என்பதுபோன்ற சொற்களுக்கும் ஆற்றல் வளர்வதாயிற்று. இதைப் போலவே தமிழ்மொழியிலும் நாளென்றசொல் நாளடைவில் ஆற்றல் மிகுந்ததாகி இருக்கிறதென்று தோன்றுகிறது. ஓரிரவுபகலையே உணர்த்துவதாகப் பழந்தமிழ்நூல்களில் காணப்படுவது வைகலென்னுஞ் சொல்லேயாகும். "வைகலும் வைகல் வரக்கண்டும்" (நாலடி. 39.) "இன்னு வைகல் வாரா முன்னே - செய்நீ முன்னிய வினையே" (புறம். 363) "காமரு சுற்றமோ டொருங்குநின் னடியுறை-யாமியைந் தொன்றுபு வைகலும் பொலிகென" (பரிபாடல். 1) "வாய்மை வயங்கி வைகல் சிறந்த" (ஷை. 2) "வைகலும், அங்குழைக் கீரை யடகு மிசையினும், எங்கணவ னல்க வினிது" (புறப்–வெ–பொது. 8) என்னுமிடங்களிலெல்லாம் வைகலென்பது ஓரிரவுபகல்கூடிய ஒரு காலப்பகுதியினையே உணர்த்துகின்றமை காண்க. இதுவரையில் கூறியவாற்றால் நந் தமிழ்மொழியிற் காலை அல்லது நக்ஷத்திரம் என்னும் பொருளில் வழங்கிவந்த நாளென்னும் சொற் பிற்காலத்திலொருநாளுக்கும் அதிலிருந்துபொதுவாக ஒருகாலப் பகுதிக்கும் பெயராக மாறியதென்று நிச்சயிக்கவேண்டியிருக்கிறது.

[தொடரும்.]

K. S. விஸ்வநாதசாஸ்த்ரி.

உ

# ஒல்லையூர்.

அகநானூறு, புறநானூறு முதலாய பழந்தமிழ்ச்செய்யுட்களில் காணப்படும் ஊர்களிற் பலவற்றின் பெயர் இப்பொழுதும் அவ்வாறே வழங்குதலும், சில உருத்தெரியாதவாறு சிதைந்து காணப்படுதலும் பலரும் அறிந்ததொரு செய்தி. அவற்றுள் ஒன்று ஒல்லையூர். இது புறநானூறு 71-வது பாட்டில் காணப்படும் ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன்பாட்டு என்ற அடிகளால் விளங்கும். பூதப்பாண்டியன் என்பான் நிலந்தருதிருவிற்பாண்டியனுக்கு முற்பட்டு கொற்கையிலிருந்து ஆண்ட ஒரு சிற்றரசனாவான் என்பது திரு. சிவராஜபிள்ளையவர்களது அபிப்பிராயம்[1]. 'பூதப்பாண்டி என்று ஓர் ஊர் பாண்டிநாட்டிலுள்ளது' என்பது புறநானூறுபாடினோர்வரலாறு[2]. பழந்தமிழர்காலவரையறை என்ற உரைநடைநூலில் இந்தப்பூதப்பாண்டி என்ற ஊர் அதியனூர் என்ற அழகியபாண்டியபுரத்துக்குத் தெற்கு மூன்றுநாலுகட்டைதொலைவில் தாலூக்காத்தலைநகராக உளது; பசும்பூண்பாண்டியன் ஆய்நாட்டை வென்றபின்னர் இந்த ஊரைத் தன்னைப்பெற்றோனது பெயரின் அறிகுறியாக உண்டாக்கியிருத்தல்கூடும்[3], எனத் திரு. சிவராஜபிள்ளை கூறுகிறார்கள்.

இனி இந்தப் பூதப்பாண்டியன் வென்று தன் நாட்டோடு சேர்த்துக் கொண்ட ஒல்லையூர் எங்குளதென விசாரிப்போம். புறநானூறு இரண்டாம்பதிப்பு 364-ம் பக்கத்தின் கீழ்க்குறிப்பில் சிங்கங்காட்டுக்குச் சமீபத்தில் ஒல்லனூரென்று ஒரு நுள்ளது என்றும் 560–ம் பக்கத்திற் கண்ட கீழ்க்குறிப்பில் 'ஒல்லையூர்: இப்பெயருள்ள ஊரொன்று பட்டுக் கோட்டைத்தாலூக்கா மணமேற்குடியின் பக்கத்துள்ளது' என்றும்

1. The Chronology of the Ancient Tamils, § 31. p. 112 et. Seq.

2. புறநானூறு. பக். 44.

3. What strikes me as peculiarly significant is the existence of another town with a rock-cut temple just 3 or 4 miles to the south, Putappandi by name. the head-quarters of the Taluk. Probably after the conquest of Pasum-pun Pandiyan founded this town in memory of his father Putappandiyan. (The chronology of the Early Tamils p. 122. Note 1.)

காணப்படுகிறது. ஓர் அரசன் கைக்கொண்டதொரு பெயராக இந்த 'ஒல்லையூர்' என்பது காணப்படுதலினாலே இது ஒரு நாட்டின் பெயராக இருத்தல்வேண்டும் என்று தோற்றுகிறது. இதற்கேற்ப பாண்டிமன்னர்களும் கொற்கைப்புறத்திருந்து சிறுகச்சிறுக நாடுகளைப் பிடித்துக்கொண்டு வடக்கிற் செல்வாராயினர்.

பூதப்பாண்டியனது முன்னோனே மதுரையென்னும் கூடலை முதன்முதல் கைப்பற்றியவன் என்பர் திரு. சிவராஜபிள்ளை[1]. கூடல்நாடு பாண்டியர்வசமாகவே இதற்குவடக்கிலோ கிழக்கிலோ ஒல்லையூர் இருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. மேல்புறம் சேரர் அரசுபுரிந்தமையின் அந்தப்பக்கம் பாண்டியர் சென்றிருக்க இயலாது. ஆகவே ஆலவாயான மதுரையம்பதிக்கு வடக்கிலோ கிழக்கிலோ இந்த ஒல்லையூர் இருக்கவேண்டுமென்று தோன்றும்.

புதுக்கோட்டைச்சீமையிலுள்ள கல்வெட்டுக்களை ஆராயும்போது இது நன்கு புலனாகும். இந்த ஒல்லையூர் ஒரு கூற்றமாக இருந்தது என்று தெரிகிறது. இதுபொழுது ஒலியமங்கலம் என்று வழங்குகிறது. இந்த ஒலியமங்கலத்திலுள்ள வாகுணீச்சுரர்கோயிற் கீழ்ப்புறம்சுவரிலுள்ள கல்வெட்டொன்றில் 'தென்கோநாட்டு ஒல்லையூர்க்கூற்றத்து ஒல்லையூர் மங்கலத்து ஊரவர்[2]' என்ற வாசகம் காணப்படுவதுகொண்டு இதனை அறியலாம். ஒலியமங்கலம் புதுக்கோட்டைச்சீமையில் திருமயம் தாலூக்காவின் மேல்கோடியில் இருக்கின்றது. ஒல்லையூர்க்கூற்றத்துக் குட்பட்டவை சாத்தனூர்[3], காரையூர்[4], கள்ளம்பட்டி[5], இடையாற்றூர்[6], சேனூர்[7], மேலைத்தானையம்[8], கீழத்தானியம், குடுமியா

1. The Chronology of the Early Tamils, p. 100, 101. இந்தக் கூடல் அகுதைவச மிருந்தது. அவனும் ஒரு போரசனாக இருந்தனன் என்பது நூல்களால் அறியப்படுஞ்செய்தி.

2. Pudukkottai Inscriptions, No 587. See also Nos. 345, 349, 386, 391, 441, 541, 556, 581.

3. ஷை No. 146, 149, 616.

4. ஷை No. 157.

5. ஷை No. 148. இது விணைதக்கியான இராஜேந்திரசோழபுரம் எனவும் பெறும்.

6. ஷை No. 161.

7. ஷை No. 163.

8. ஷை No. 199. இது முற்காலத்து மேற்றணியம் என்று வழங்கி வந்தது.



மலை[1], முதலாய ஊர்கள், இந்தக் கூற்றத்தைச் சார்ந்தவை என்று கல்வெட்டுக்களால் அறிகின்றோம். ஈண்டுக்கூறிய ஊர்களெல்லாம் திருமய்யம்தாலூக்காவிலேயே இருக்கின்றன. ஆகவே பூதப்பாண்டியன் வென்ற ஒல்லையூர்நாடு இந்தப் பகுதியாக இருத்தல்கூடுமென்பதற்குப் போதியசாதனங்கள் இருக்கின்றன.

இலக்கணவிளக்க ஆசிரியர்பாம்பரை
திரு. சோமசுந்தரதேசிகன்.

---

# பெருவாயில்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று ஆசாரக்கோவை என்னும் நூல். இந்நூலை இயற்றிய ஆசிரியர்பெயர் பெருவாயின்முள்ளியார் என்பது. இது ஆன்றோர் ஆசாரங்களைக் கூறும் நூல். இந்த நூலை அச்சிட்டோர் பல்லோராவர். ஆயினும் ஒருவராவது பெருவாயின்முள்ளியார் என்ற தொடரை விவரித்தாரில்லை. பெருவாயின்முள்ளி என்ற ஊரினர் என்று கூறும் பண்டிதர்களும் இக்காலத்திலும் உண்டு. பெருவாயில் என்ற ஊரின்கண் பிறந்து முள்ளியார் என்ற பிள்ளைத்திருநாமம் உடையவர் இவ்வாசிரியர் என்று கொள்பவர் பலர்.

ஆயினும் இந்தப் பெருவாயில் என்ற ஊர் எங்குளது என்று ஆராய்ந்தார் ஒருவருமிலர். யான் புதுக்கோட்டைச்சீமைக் கல்வெட்டுக்களை யாராயும்போது பெருவாயில் என்பதோர் ஊர் உண்டென்று கண்டேன். அது பெருமாநாடு என்று இதுபொழுது பேர்பெறும். இது குளத்தூர்தாலூக்காவிலுள்ளது. இது கல்வெட்டுக்களில் பின்வருமாறு காணப்படுகின்றது.

1. செயசிங்ககுலகாலவளநாட்டு பெருவாயில்நாட்டு நாடாய் இசைந்தநாட்டோம். (பக். 383.) 2. பெருவாயில்நாட்டு மயிலாப்பூர் (பக். 374.) இவைகளினாலே பெருவாயில் என்ற ஊர் புதுக்கோட்டைச் சீமையிலே குளத்தூர்தாலூக்காவில் பெருமாநாடு என்று பேருடையதாக வழங்கிவருகிறதென்று அறியலாகும்.

திரு. சோமசுந்தரதேசிகன்.

---

1. புதுக்கோட்டை கல்வெட்டுக்கள், நெ. 867.

# மதிப்புரை.

தரிசனத்திரயம்:—இப்புத்தகம் ஸ்ரீமுத்துகிருஷ்ணபரமஹம்ஸ ஸ்வாமிகளால் தம்முடைய யோகக்காட்சியால் அறியப்பட்ட அருமையான விஷயங்களை 'பக்தி சாதனை' 'ஆத்மசுபோதம்' 'ஹம்ஸகெந்தர்வ தத்துவம்' என்னும் மூன்று பகுதிகளாகப் பகுத்துத் தெளிவான தமிழ்நடையி லெழுதப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்திற் சிலபாகம் சுவானுபூதிமான்களால் அறியத்தக்க யோகசாதனமான விஷயங்களும், சாங்கியமுதலிய யோகசாஸ்திரப் பயிற்சியுள்ள சுவானுபூதிமான்களிடமிருந்து கேட்டுத்தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களும், சாதாரணமாகப் படிப்பவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்க பலவகையான போதனைகளும் சொல்லப்பட்டுள்ளன. பகவத்கீதையிலுள்ள யோகசாதனமான கருத்துக்கள் இடையிடையே காணப்படுகின்றன. உலகப்பற்றறுத்து முத்திநிலையடைய முயல்வோரால் ஆதரிக்கத்தக்கது. சித்தசுத்தியடைதற்குரிய செயன்முறைகளும், ஆத்துமதத்துவத்தைப்பற்றி அறியவேண்டிய விஷயங்களும் விரிவாயெழுதப்பட்டுள்ளன. பிரகிருதிதத்துவவிஷயங்களும் இக்காலத்தவருக்கேற்றவாறு விஞ்ஞானசாஸ்திரக்கருத்துக்களைத் தழுவி எழுதப்பட்டுள்ளன. விஷயங்களை நிரூபிக்குமிடங்களில் ஆங்காங்கு சந்தர்ப்பத்துக்கேற்ற சிறுகதைகளும் உபமானங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் எல்லாராலும் படித்தற்குரியது. இதற்கு இந்நூலாசிரியர்மாணாக்கரும், யாழ்ப்பாணத்துப் பரமேசுவரகல்லூரியதிபருமாகிய ஸ்ரீமான். சு. நடேசபிள்ளை B.A., B.L. அவர்கள் ஆர்வமுற்றுப் பாடிய குருவடிப்புகழ், பீதாபுரநவமணிமாலை என்னும் பாடல்கள் துதிப்பாடல்களாக முகப்பிற் சேர்க்கப்பெற்றுள்ளன. யோகசாதநப் பயிற்சி குன்றிய இக்காலத்தில் புதிய கருத்துக்களமைந்த இத்தகைய புத்தகங்கள் அப்பயிற்சியுணர்ச்சியையும் அதில் முயற்சியையும் தோற்றுவிக்கத்தக்கன.

---



தமிழ்ப்பாடப்புத்தகம் (முதற்பாகம்):-இது, மதுரை செயிண்டு மேரி உயர்தரக்கலாசாலைத் தலைமைத்தமிழாசிரியர் ஸ்ரீமான். சவுரி முத்துப்பிள்ளையவர்களால் எழுதப்பெற்றது. இதில் உரைநடைப் பகுதியும் செய்யுட்பகுதியும் உள்ளன. அவை ஆறும்வகுப்புமாணவர் கற்பதற்குத் தகுதியாயமைக்கப்பெற்றன. இதிலுள்ள வாசகபாடங்களும், செய்யுட்களும் மாணவர்களுக்கு நல்லறிவுபுகட்டற்குரியன. அன்றியும் தெய்வபக்தி, பொதுநோக்கு, நல்லொழுக்கம், மனத்தூய்மை முதலான நற்குணங்களமைதற்கேற்ற பொருளுரைகள் ஆராய்ந்தெழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளன. செய்யுட்களும் பொதுவான நீதிகளைப் போதிக்கத்தக்கன. மதத்துவேஷங்கொள்ளாது சமரசமான நல்லொழுக்கத்தைச் சிறுவர்களுக்குப் போதிப்பதற்கு இத்தகையபுத்தகங்களே மிகவும் பயன்படத்தக்கன. சொல்லப்படும் விஷயங்கள் மாணவர் மனங்கொள்ளும்படி தெளிவும் சுவையுமுள்ள செவ்வியநடையாலெழுதியிருப்பது பாராட்டத்தக்கது.

---

இராமாயணதருமம்:—இப்புத்தகம் சிந்தாமணிக் கிராமம் கர்ணம் ஸ்ரீமத். S. K. ரெங்கையங்கார் அவர்களால் எழுதப்பட்டது. வால்மீகராமாயணம், கம்பராமாயணம் முதலான வடமொழி தென்மொழி நூற் சான்றுகளுடன் குருசிஷ்யதருமம், நன்மக்கட்பேறு, ஒழுக்கமுடைமை, பிறனில்விழையாமை, விருந்தோம்பல், மனைமாட்சி முதலான அரிய பல நீதிகளை இதன் ஆசிரியர் இதில் விரிவாக ஆராய்ந்திருக்கின்றனர். தருமோபதேசம்செய்யும் குருக்களுக்கும், கதாகாலக்ஷேபம் செய்பவர்களுக்கும், உபநியாஸகர்களுக்கும் இப்புத்தகம் மிகவும் உபயோகமானது. எல்லோரும் படித்தறியுமாறு எளிய தமிழ்நடையில் இதனை ஆசிரியர் எழுதி வெளியிட்டிருப்பது பரமோபகாரமாகும். சுமார் 350-பக்கங்களளவுள்ள இப்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0. வேண்டுவோர் 'S. K. ரெங்கையங்கார், கர்ணம், சிந்தாமணிக் கிராமம், புளியங்குடி போஸ்டு, திருநெல்வேலி ஜில்லா' —என்ற விலாசத்திற் பெறலாம்.

---

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

'செந்தமிழ்' தொகுதி ௨௧, பகுதில் ௨-ல், ௫௨-ம் பக்கத்தில் ௧௨-ம் வரியில் 'இருதிறத்தாரும் ஒப்பும்படி இரண்டாம்பாட்டையும்' என்பதன் பின் 'கூறினார்' என்பதைச் சேர்த்துக்கொள்க. அதன்பின் 'தம்கதா நாயகன் விட்டுணுவின் அவதார மென்பதற்கு இயைய மூன்றும் பாட்டையும் உய்த்துணரும்படி இயற்றினாரென்பது பொருந்தும்.' என்றிருப்பதை நீக்கி அடியில் வருவதைச் சேர்த்துக்கொள்க:—

தமிழ்நாட்டிலே, அச்சுப்பாடபுத்தகங்கள் ஏற்படுமுன்னே, பிள்ளைகள் வித்தியாரம்பகாலத்தில் படித்த அரிச்சுவடியென்ற நெடுங்கணக்கு, ஓலைச்சுவடியாயிருந்தது. அது, 'அரி நமோத்து சிந்தம். அ(ன), ஆ (வன்ன)' என்று ஆதியில் அரியெனத் தொடங்கி, அந்தத்தில் 'னௌ (வன்ன), (இ) ன் (னன்ன) அரி ஓம் நன்றாக குருவே துணை' என்றெழுதி முடிக்கப்பட்டிருத்தல் தவறாத முறையாயிருந்தது. நெடுங்கணக்குக்கு, அரிச்சுவடி, அரிவரியென்ற பெயர்கள் அந்தமுறைபற்றி ஏற்பட்டவை.

வைணவச்சிறுவர்மட்டுமாகவல்லாமல் பிறமதப்பிள்ளைகளும் அரிச்சுவடிபடிக்கும்போது 'ஆதி அந்தம் அரியென ஓதினார்'. இக்காலத்தும் பிள்ளைகளுக்கு முதல்முதலாகக் கல்வி கற்பிக்கத் தொடங்கும்போது உபாத்தியாயர், ஓலையில் 'அரி நமோத்து சிந்தம்' எனத்தொடங்கி, 'அரி ஓம் நன்றாக குருவே துணை' என்றெழுதிமுடித்து, மஞ்சள்பூசிச் சித்தமாக வைத்திருக்கும் ஓலை அரிச்சுவடியைப் பிள்ளைகள் கையில்வைத்து முதலில் 'அரி நமோத்து சிந்தம், அ (ன), ஆ (வன்ன)' என்றும் முடிவில் 'அரி ஓம் நன்றாக குருவே துணை' என்றும் தாம் சொல்லிக்கொடுத்தும் பிள்ளைகளைச் சொல்லச்செய்தல் முற்றும் ஒழிந்துவிடவில்லை.

அன்றியும், அரிச்சுவடி முதலான எல்லாநூல்களுக்கும் காப்பு ஆகக் காவற்கடவுளாகிய திருமாலைப் பிரார்த்தித்தல் இயல்பே. ஆதலால், இந்த அரங்கேற்றச்சபையிலுள்ள எல்லாமதத்தினரும் இந்த இராமாயணகதாரம்பத்தில் கதாநாயகனாக அவதரித்த அரியை வணங்குதல் முறையாமென உய்த்துணரச்செய்து அவர்கள் யாவரும் தடையின்றி ஒப்புக்கொள்ளும்படி 'ஆதி அந்தம் அரி' என்ற மூன்றும் பாட்டையுங் கூறினார்.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.



### இதுவுமது.

293. போதாந்தர் போற்றுநன் மங்கல நாணென்றும் பூண்டவெங்கள்
மாதா வளர்சிவ காமிகண் டத்தணி வாய்ந்துநறும்
தாதாடுங் கொன்றைக் கலைசைத் தியாகர் தமக்கினிய
வேதா சலத்தின் புகழ்போல் விளங்குக வெண்சங்கமே. (௧௯)

### தலைமகன் வந்துழிப் பாங்கி தம்மை நினைத்தமை வினாதல்.

294. புனைந்துமந் தாகினி பொற்சடை மீது பொருபுலித்தோல்
வனைந்துநின் றாடுங் கலைசைத் தியாகர் வரையன்பரோ
நினைந்து மறிதிர்கொல் லோவிரு போதுங்கண் ணீர்மழையால்
நனைந்து கிடக்கு முடையாளை நீர்சென்ற நாட்டகத்தே. (௨0)

### தலைமகன் நினைத்தமை செப்பல்.

295. எனையுய்வந் தாண்ட கலைசைத் தியாகரை யேத்தியிரு
வினையுங் கழித்தவர் தொண்டைநன் னாடன்ன மின்னினையும்
உனையுமெப் போதுகண் டேன்கண்ட நாண்முத லோரிடத்தும்
நினையும் பரிசில்லை யான்மற வாமை நிலைத்தபின்னே. (௨௧)

---

293. போதாந்தர் - ஞானிகள். என்றும் அழியாத கணவரைப்பெற்றிருத்தலின் 'மங்கலநாண் என்றும் பூண்ட' என்றார்; "மைந்நின்ற வொண்கண் மலைமகள்" (தே.) என்ற திருவாக்கு இங்கே நினைவுக்குவருகிறது. கண்டத்தின் அழகை வாய்ந்து. வேதாசலம் - வேதாசலமுதலியார்; இஃது ஒரு பிரபுவின் பெயர்.

294. பொற்சடைமீது மந்தாகினியைப் புனைந்து. உடையாளை - ஆடையையுடையவளை. கண்ணீரால் ஆடை நனைதல்: "நெடுங்கண்களுகுத்த, அப்பினானனைந்து ..............ஒருநிலையுறாத மென்றுகிலாள்" கம்ப. காட்சிப். 8.

295. இருவினைகளையும் கழித்தவர் வாழ்கின்ற தொண்டை நாடு. மறவாமை நிலைத்தபின் நினையும் பரிசில்லை; "மறந்தா னினைத்தலு முண்டுபொன்னேயுங்கள் வஞ்சியையே." வெங்கைக். 282.

### தலைமகளை ஆற்றுவித்திருந்த அருமை கூறல்.

296. சிவங்காட் டியதென் கலைசைத் தியாகர் சிலம்பவுன்றன்
தவங்காட் டியவுரு வைப்படந் தீட்டித் தயங்கநவ
நவங்காட்டித் தேர்சென்ற நல்வழி காட்டிநின் னன்றியனு
பவங்காட்டி யாற்றுவித் தேனெங்கள் பாவையைப் பாலிருந்தே.

## கக. வரைவு மலிவு.

### காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்கு உரைத்தல்.

297. நின்வண்ண மேனூறு பொன்வண்ண மாறமின் னேயெனையும்
தன்வண்ண மாக்குங் கலைசைத் தியாகர் தடத்துநம்மில்
முன்வண்ண மேருநின் றுலென்ன வுன்றன் முலைவிலைக்காப்
பொன்வண்ணத்தோன்பர்வைத்தார்கொடுவந்துபொற்குவையே.

### காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளல்.

298. மன்றலம் புன்னை மருப்பங்கை யாற்கண்டல் வண்முகையாம்
மன்றநற் கொங்கை யளவுந் துறைவன் மருவியசோ
மன்றலைக் கிட்ட கலைசைத் தியாகர் வரைவருமேல்
மன்றற் றிருவணி கண்டியாயு நம்மின் மகிழ்வுறுமே. (உ)

---

296. சிவம் - முத்தி. நவம் - புதுமை. நன்றி - நன்மை. பால் - பக்கத்தில்.

297. பொன் வண்ணம் மாற - பசலைநிறம் நீங்க. தடம் - மலைப்பக்கம். இல்முன் - வீட்டின் முன்னே. வண்ணம் மேரு - அழகிய மேருமலை; பொற்குவைக்கு மேருமலை உவமை. மாறப் பொற்குவையை.

298. புன்னை: எழுவாய். மருப்பு அம் கையால் - கொம்பாகிய அழகிய கையால். கண்டல் - தாழை. மன்ற: அசை. தாழையின் முகையாகிய கொங்கையை அளவுகின்ற; கையால் அளவுகின்ற. சோமன் - சந்திரனை. துறைவன் வருமேல் - துறைவன் வருவானாயின். மன்றல் - கலியாணம். நம்மின் - நம்மைக் காட்டிலும்.



### பாங்கி தமர் வரைவெதிர்ந்தமை தலைமகட்கு உணர்த்தல்.

299. அதிர்ந்திடு மாழிக் கருங்கழி நாற்ற மடம்பினின்றும்
உதிர்ந்திடும் பூமண மாற்றுந் துறைவர்க் குயர்ந்தபத்தி
முதிர்ந்தவர் போற்றுங் கலைசைத் தியாகர் முதுகுன்றுளோர்
எதிர்ந்தன ரோகை முரசறைந் தார்மகிழ்ந் தேந்திழையே (ந)

### தலைமகள் உவகையாற்றாது உளத்தொடு கிளத்தல்.

300. சிறையுந்து நீர்த்தண் கலைசைத் தியாகரைச் சேரலர்போல்
மறையுந் தொழில்களு மாங்கவற் றுல்வந்த வாட்டமுநம்
குறையுமின் றேடநெஞ் சேநம தன்பர்கைக் கொண்டுவகை
நிறையு மணமுர சார்க்கின்ற தானந் நெடுநகர்க்கே. (ச)

### தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.

301. இன்று வொழிக்குங் கலைசைத் தியாகர்வெற் பெய்தியந்நாள்
இன்னார்கொண் டுன்கண்ணி கையாரத் தையலுக் கிட்டபலன்
இன்றுநகங் கொண்டசெவ் வேள்வள்ளி போலவிங் கெய்தலினால்
இந்நா ளெதிர்ந்தன மாலென்றும் வாழி யிறையவனே. (ரு)

### தலைவி மணம்பொருட்டாக அணங்கைப்பராநிலை பாங்கி தலைவற்கு உணர்த்தல்.

302. அணங்கமர் மாடக் கலைசைத் தியாகருக் கன்பிலர்போல்
அணங்கர வல்குனல் லாளுந் பொருட்டண்ட கூடமட்டும்
அணங்கன கச்சிக ரப்பொருப் பின்புறத் தாலயத்துள்
அணங்கர விந்தத்தா ளேத்துதல் பார்த்தரு ளாண்டகையே. ()

---

299. கழியின் நாற்றத்தைப் பூவின்மணம் மாற்றும் துறைவர்க்கு. முதுகுன்று - விருத்தாசலம். எதிர்ந்தனர் - ஏற்றுக்கொண்டார்.

300. சிறை - கரை. மறையும் தொழில்கள் - களவுப்புணர்ச்சிக்குரியன. உவகை - மகிழ்ச்சி. பி-ம். 'வாட்டமுறுங்'

301. அந்நாளில் இனிய நாரைக்கொண்டு; நார் - அன்பு. இல் நாகம் கொண்ட - இருப்பிடத்தை மலையாகக் கொண்ட; நாகம் - மலை. பலன் - கலியாணம். நீங்கள் எய்தலினால்.

302. அணங்கு - அழகு. அணங்கு அரவு - வருத்துகின்ற பாம்பைப் போன்ற. அண்டகூடமட்டும் அண்ணிய அம் கனக சிகரம். பொருப்பின் புறத்தே - மலையின் புறத்தே. அணங்கு - துர்க்கையினுடைய,

அணங்கைப் பராவிலை கண்ட தலைமகன் மகிழ்தல்.

303. இப்பே ரறிவிவட் கெவ்வண்ண மெய்திய தென்பொருட்டா
முப்பே ருலகும் புகழ்கூர் கலைசையின் முத்தலங்கற்
செப்பே ரிளமுலை பாகன் சிதம்பர தேவன்வெற்பில்
துப்பே ரிதழி மலர்தூஉயித் தெய்வந் தொழுவதற்கே. (௭)

## ௨௦. தலைவி அறத்தொடுநிற்றல்.

கையறுதோழி கண்ணீர் துடைத்தல்.

304. வெண்ணீ றணியுங் கலைசைத் தியாகரை மேவலர்போற்
கண்ணீர் மழைபொழி தற்கொரு காரணங் கண்டிலமால்
பண்ணீர் மொழிமயி லேவிளை யாடும்பொற் பாவைதன்னைத்
தெண்ணீர்த் திரைகொண்டு போயின தோவென்னை செப்புகவே.

தலைவி கலுழ்தற்காரணங் கூறல்.

305. கனக்கறைக் கண்டர் கலசத் தியாகர் கலைசையன்னாய்
வனக்கணிக் கீழ்வந் தெனைப்புணர்ந் தேகிய மன்னவரை
எனக்குமுன் காட்டிய கண்மலர் காண்பதற் கின்றவரைத்
தனக்கெனைக் காட்டிடென் றேயழுங் காரணந் தானிதுவே. (௨)

தலைவன் தெய்வக்காட்டித் தெளிப்பத் தெளிந்தமை கூறல்.

306. நலம்பர வுந்தென் கலைசைத் தியாகர்நன் னாட்டுவரிக்
கலம்பர வுந்துறைத் தெய்வத்தின் முன்னின்று கையெடுத்துப்
புலம்பரன் பாகத் தெளித்தவை யாவும் பொறியிலியேன்
சலம்பர வாவண்ண மெய்யாக நம்பினன் சாலவுமே. (௩)

---

303. என்பொருட்டாத் தொழுவதற்கு இப்பேரறிவு எவ்வண்ணம் இவட்கு எய்தியது?

305. கனம் - மேகம்போன்ற. வனத்திலுள்ள வேங்கைமரத்தின் கீழே. கண்மலர்: எழுவாய். அழும்: முற்று.

306. கலம் பரவும் உவரித் துறை; கலம் - கப்பல்; உவரி - கடல். துறைத்தெய்வம்: "உண்டுறை யணங்கு" (ஐங். 28); "கடற்றெய்வங் காட்டிக் காட்டி, அரியசூள்." புலம்பர் - நெய்தல்நிலத்தலைவர்; புலம்பு - கடற்கரை. பொறி - அறிவு. சலம் - வஞ்சனை.



தலைவி தலைமகன் இகந்தமை இயம்பல்.

307. மறைமொழி வாயர் கலைசைத் தியாகர்வண் பாலிநதித்
துறைமொழி பேசற் கரிநமக் கென்றன்பர் சொல்லியொரு
குறைமொழி யாமல் விடுத்திகந் தார்நற் குணப்பெரியோர்
நிறைமொழி குன்றிற்குன் றுததுண் டோமண்ணி னேரிழையே.

பாங்கி இயற்பழித்துரைத்தல்.

308. நற்றேவர் சூழுங் கலைசைத் தியாகர் நயந்ததெண்ணீர்
உற்றே றியநந்தி யோடையின் வாய்நின்று மொண்டுறைவர்
பற்றேக யானக லேனென் றுரைத்தும் பரிந்தழநீ
எற்றே துறந்தன ரேயவர் போலில்லை யேதிலரே. (௫)

தலைமகள் இயற்பட மொழிதல்.

309. காயிலைச் சூலர் கலசத் தியாகர் கலைசையன்னம்
சேயிதழ்த் தாமரை மேல்வீற் றிருந்து சிறையளிகள்
வாயினிற் பாட மகிழ்தொண்டை நாட்டன்பர் வன்கொடியர்
ஆயினு மாக வவரே யெனைப்புரந் தாள்பவரே. (௬)

தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றல்.

310. இதம்புரி மெய்யன்பர் சொற்பிற ழாத்தன்மை யின்மையினால்
சிதம்பர வீசர் கலசா புரியரைச் சேரலர்போற்
கதம்புரி யேறெய்வ மேயென்று சென்று கனபலிதூஉய்ப்
பதம்பர வக்கட வேமிரு வேமும் பணிமொழியே. (௭)

---

307. பாலிநதித் துறையில் மொழிந்த மொழியே. குறை - காரியம். நிறைமொழி - பொருள்நிறைந்தமொழி; "நிறைமொழிமாந்தர்" குறள்.

308. நந்தியோடை : தொட்டிக்கலையிலுள்ள ஓரோடை; அதற்குத் திருவிழாக் காலத்திற் கலசத்தியாகர் எழுந்தருளுவதுண்டு. பற்று - அன்பு. நீ அழ. எற்று - எத்தன்மைத்து. ஏதிலர் - அயலார்.

309. சேயிதழ் - செம்மையாகிய இதழ்களையுடைய. கொடியர்........ ஆள்பவரே: "தண்ணந் துறைவன், கொடிய னாயினு மாக, அவனே தோழியென் னுயிர்கா வலனே" பழையபாடல்.

310. இதம் - விருப்பமாகிய செயல்களை. கதம் புரியேல் - கோபம் செய்யாதே. பலிதூய் - மலர்ப்பலியைத் தூவி.

### தலைவி இல்வயிற் செறித்தமை சொல்லல்.

311. அனம்போ னடைச்சி கலைசைத் தியாகருக் கன்புசெயார்
தனம்போ லிருத்திமற் றைம்பொறி வாயிற் சரித்தல்செயார்
மனம்போற் றடுத்தென்னை வைத்தன ளாலன்னை வாரமிலாக்
கனம்போற் கருங்குழ லாரலர் தூற்றுதல் கண்டுகொண்டே. (அ)

### செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல்.

312. தங்காப்பு மாசுணத் தால்வளை கின்ற சதுரரென்றும்
மங்காப் புகழ்கூர் கலைசைத் தியாகர் வரையணங்கே
பைங்காப் புடைநின் றொருவன்பின் னூழையின் பால்வரக்கண்
டங்காப் புடன்காப் படைத்தே னெனமோ யறைந்தனளே. (கூ)

### செவிலி தலைமகள்வேற்றுமைகண்டு பாங்கியை வினாதல்.

313. தெளிவார்க் கருளுங் கலைசைத் தியாகரைச் சேர்கிலர்போல்
ஒளிவாள் விழிபிறி தாய்முத் துறைக்க வுறைபுனற்கு
மிளிவார் முலைபசும் பொன்பூத் துடம்பும் விளர்த்ததனால்
அளிவா ழுளகத்தி னாட்கூற்ற தீதென் றறிகிலனே. (க0)

---

311. அனம் போல் நடைச்சி: "கொடைச்சிவந்தான் கோடைக் குளிர் காவிலன்ன, நடைச்சிவந்தா லென்செய்கே னான்" (தனிப்பாடல்). இருத்தி - பயன்படாமல் என்னை இருக்கச் செய்து. அன்னை வைத்தனள். வாரம் இலா - அன்பு இல்லாத.

312. மாசுணத்தால் தம் காப்பு வளைகின்ற; மாசுணம் - பாம்பு. நூழை - நுழை வாசல். அங்காப்புடன் - வாய் திறப்புடன். மோய் - தாய்; "அருந்ததிக் கற்பி னெம்மோய்" கம்ப. சூர்ப்பணகை. 50.

313. முத்து - முத்துப்போன்ற கண்ணீர்த்துளியை. குமிளி - குமிழி; தென்னாட்டு வழக்கு; "பெயறுளி முகிழெனப் பெருத்தநின் னிளமுலை" (கலி. 56: 24.) உற்றது ஈது.



### பாங்கி வெறிவிலக்கல்.

314. இவருடை யாருயி ருண்ணிய வோபலி யேற்றுமுன்சேர்ந்
தவருடை யார்வத் தழுந்திவ ணோயட வோமுருகே
கவருடை நெஞ்சத்தெம் மில்லத்துள் வந்த கருத்தெவனோ
துவருடை யாளர் கலைசைத் தியாகர் சுடர்வரைக்கே. (கக)

### செவிலி தோழியை வினாதல்.

315. பொன்னுற்ற மார்பன் பணிகோ விருந்த புரத்திலென்றும்
மன்னுற் றருளுஞ் சிதம்பர வீசர் வரையின்மின்னே
துன்னுற்ற மாதர்முன் சூர்தடிந் தானைச் சுடர்மரக்காற்
பின்னுற்ற நாளினை யென்னையிவ் வாறுகொல் பேசியதே. (கஉ)

### தோழி பூத்தருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்.

316. வாமம் பெறுநின் மகட்கொரு பூவண்ண வண்டுகொண்ட
நாமங்கொள்போதொன் றுன்கண்ணிற்கொள்வாயென்றோர்நம்பிவந்து
சேமந் தழைதரத் தந்தான் கலைசைத் தியாகர்வெற்பிற்
காமஞ் சரிகொய்து யாம்விளை யாடிய காலையிலே. (கரு)

### புனறருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்.

317. குருமணி யன்னநின் கன்னியைம் பாற்குக் கொழித்திடுந்தன்
கருமண லொப்புறல் கண்டிவ ளாடுங் காற்கந்தள்ளத்
திருமணிப் பாலியிற் பாய்ந்தெடுத் தானொரு செம்மலுமைக்
கொருமண வாளர் கலைசைத் தியாகரை யுள்கிவந்தே. (கச)

---

314. இவருடை ஆருயிர் உண்ணியவோ-இந்த ஆட்டின் அரிய உயிரை உண்ணுதற்காகவோ. முன் சேர்ந்தவருடைய ஆர்வத்து; சேர்ந்தவருடை: தொகுத்தல். கவர்த்தல் - பிளவுபடுதல். எவனோ - யாதோ. துவர் உடையாளர் - காவியுடையார்; "காமனை முனிந்து நெடுஞ்சடை முடித்துக் கவின்றகல் லாடை மேற் புனைந்து" காஞ்சிப். நகரப். 109.

315. பொன் உற்றமார்பன்; பொன் - திருமகள். மன்னுற்று - நிலை பெற்று. சூர் தடிந்தானை - முருகக்கடவுளை; சூர் - சூரபதுமன். மரக்கால் - சுவாதி நட்சத்திரம். பின்னுற்ற நாள் - விசாகநட்சத்திரம்.

316. வாமம் - அழகு. ஒரு பூவைத் தந்தானென இயைக்க. வண்டு கொண்ட நாமம் - புண்டரீகம்=தாமரை. சேமம் - இன்பம். காவில் மஞ்சரியைக்கொய்து; மஞ்சரி - பூங்கொத்தை.

317. ஐம்பாற்கு - கூந்தலுக்கு. ஆடுங்கால் கம் தள்ள - ஆடும்பொழுது நீர் இவளைத் தள்ள. பாலி - பாலாறு.

### இதுவுமது.

318. தன்னிடைத் தோன்றிய சைவலக் கொத்தையுன் றையலைம்பால்
வென்னிடச் செய்ததென் றூடிடுங் காலம் விரைந்திழுக்கப்
பொன்னுடை யானிற் சுனைவீழ்ந் தெடுத்துப் புரந்தனனோர்
கன்னெடுந் தோளன் கலைசைத் தியாகர் கனவரைக்கே. (௧௫)

### களிறுதருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்.

319. தொடையார் குழலி நண்டக்கிடை தன்பிடி சோர்தல்கண்டவ்
விடையானை யொன்று கனன்றிவண் முன்வரு மேல்வையென்னை
உடையார் கலைசைத் தியாகர்முன் னாக முரித்தெனவேற்
படையாலவ் வானையைக் கீண்டளித் தானொரு பார்த்திபனே. ()

### தலைமகள்வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினாதல்.

320. வண்டமிழ் கூறுங் கலைசைத் தியாகர் மலைவனிதாய்
பெண்டன்மை யம்ம முழுதிழந் தாளென் பெருமகண்முன்
கண்டகண் ணுக்கின்று வேற்றுருக் காட்டிக் கடக்கரிதான்
உண்டவெள் ளிற்கனி போலான காரண மோர்ந்துரையே. (௧௭)

### செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியால் அறத்தொடுநிற்றல்.

321. மருவில்வஞ் சூடுங் கலைசைத் தியாகர் வரைப்புனத்திற்
பொருவிறற்போதகம்வந்ததுண்டோவென்றுபோந்துவினாய்த்
தருவு மதிலணை வல்லியும் போலநின் றையன்முலை
ஒருவிதி கூட்ட முயங்கின ராலன் றொருசெல்வரே. (௧௮)

---

318. சைவலம் - பாசி. வென்னிட - முதுகிட. அம் - நீர். பொன்னுடையானின் - திருமாலைப்போல.

319. இடை தன் பிடி - பின்னிட்ட தன்னுடைய பெண்யானை. அவ்விடை - அவ்விடத்தில். எல்லை - காலத்தில். நாகம் உரித்தென - யானையை உரித்தாற்போல. அளித்தான் - பாதுகாத்தான்.

320. வேற்றுருக் காட்டிப் பெண்தன்மை முழுதிழந்தாளெனக் கூட்டுக. கடகரி தான் உண்ட வெள்ளிற் கனி - யானையுண்ட விளங்கனி; கடகரி : சாதியடை; கரி - உள்ளீடில்லாமற்செய்யும் ஒரு நோய்; “தூம்புடை நெடுங்கை வேழந் தற்றிய வெள்ளி லேபோல்” சீவக. 232.

321. போதகம் - யானை. வினாய் - கேட்டு. தரு - மரம். வல்லி - பூங்கொடி.



## ௨௧. உடன்போக்கு.

### பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தல்.

322. கள்ளார்க் குவதர் சிதம்பர வீசர் கலைசைவெற்பா
வள்ளார்கண் ணாளுட னின்பதிக் கேசென்று வாழ்ந்தருள்வான்
உள்ளா ரிருநிதி யுங்கொடு வந்திங் குதவினுநீ
கொள்ளார் முலைவிலை யாகவெம் மையர் குறையறவே. (௧)

### தலைவன் உடன்போக்கு மறுத்தல்.

323. சுடர்ப்பாலை வன்னி கமர்வழி போய்வையந் தூக்கிநிற்கும்
விடப்பாந்த ளுச்சி வெதுப்புங் கடத்தில் விமலையைத்தம்
இடப்பாகம் வைத்த கலைசைத் தியாகரை யெண்ணலர்போல்
நடப்பா ரெவர்துணிந் திப்பூங் கொடியுட னன்னுதலே. (௨)

### பாங்கி தலைமகளை உடன்படுத்தல்.

324. சங்கையி லாவெம் பரலார் முரம்புந் தழற்சுரமும்
செங்கைகொள் வேல சிதம்பர வீசர் திருக்கலைசை
மங்கைய ராடுந் திருநந்தி யோடையு மல்குசிவ
கங்கையுந் தானல்ல வோநின்னொ டேகினெங் காரிகைக்கே. (௩)

### தலைவன் போக்கு உடன்படுதல்.

325. கோதைத் தவிர்க்குங் கலைசைத் தியாகரைக் கூறலர்போம்
பாதைக் கடுந்தழல் பார்த்துமென் சீறடி பாங்கனிச்சப்
போதைப் பகையென்று கூசுதல் கண்டும் பொலந்தொடியென்
பேதைத் தனிநெஞ் சிவளுடன் கான்செலப் பெட்புற்றதே. (௪)

---

322. கள் ஆர்க்குவதர் - தேனையுடைய கொன்றையை அணிந்தவர்; ஆர்க்குவதம் - கொன்றை. வள் - கூர்மை. வாழ்ந்தருள் - வாழ்ந்தருள்வாயாக. வானில் உள்ளாருக் குரிய இரண்டு நிதியையும் நீ உதவினும்.

323. பாலை வன்னி - பாலைநிலத்திலுள்ள நெருப்பு. கமர் - வெடிப்பு. விடப்பாந்தள் - ஆதிசேடனது. கடம் - பாலைநிலம்.

324. சங்கை - அளவு. முரம்பு - பருக்கைக்கற்களாலாகிய மேடு.

325. பாதை - வழி. பாங்கு - அழகு. பொலந்தொடி: விளி.

### பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்.

326. தூண்டற் கரிய சுடரானை யாய்பஞ்சிற் றாக்குபதம்
நீண்டக் கினியெரி கான நடந்து நிரைவளையாள்
பாண்டப் பலம்பு கலைசைத் தியாகர் பவனிவிழாக்
காண்டற் குடன்வரு மோவென் றவாவினர் காவலரே. (௫)

### தலைவி நாணழிபிரங்கல்.

327. தண்ணார் பதங்க மரியயன் றேடியுந் தாமறிய
வொண்ணாச் சிதம்பர வீசன் கலைசை யுறுரொனவென்
கண்ணா ருயிரென வுற்றநன் னாணங் கழன்றிடலாற்
பெண்ணாச் சமைத்த வினையேபோல் லாத பெருவினையே. (௬)

### கற்பு மேம்பாடு பாங்கி கூறல்.

328. காணினுங் கேட்கினு மானந்த மாகுங் கலைசையபி
ராணிதன் கேள்வர் சிதம்பர வீச ரருளனையாய்
பேணிய வாவியிற் பெற்றிடுந் தாயிற் பெரிதெனச்சொல்
நாணினு நற்பொருள் கற்பாவ தேயென்று நங்கையர்க்கே. (௭)

### தலைவி ஒருப்பட் டெழுதல்.

329. பூத வனீகர் சிதம்பர வீசரைப் போற்றிலர்போல்
மாதர் விரோதத்திற் றுயர் குரோதத்தில் வாட்டமுற்ற
யாதனை தீரக் கலைசைக்கெ னன்பரொ டேகுவல்யான்
ஆதலி னின்னமிவ் வூரம்ப றூற்றி யழுங்குகவே. (௮)

---

326. "தூண்டா விளக்கனையாய்" (திருச்சிற். 244.) நீண்டு அக்கினி எரிகின்ற காடு. பாண் தப்பு அலம்பு - பாணர்கள்கையிலுள்ள தப்பு என்னும் ஒருவாத்தியம் ஒலிக்கின்ற. வருமோ - வருவாளோ. என்று அவாவினர்.

327. பதம் கம் - பாதத்தையும் தலையையும். என்கண் - என்னிடத்தே. நாணத்திற்கு உயிர் உவமை.

328. அயிராணி தன் - உமாதேவியாரது. ஆவியின் - உயிர்போல. தாயின் - தாயைப்போல; பழிநீக்கிப் பாதுகாத்தலின் தாயைப்போன்றது நாண் (திருச்சிற். 204, பேர்.) என்றும் - எக்காலத்தும்; "உயிரினுஞ் சிறந் தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல். களவு. 22); "தாயிற் சிறந்தன்று நாணுடைய லாருக்கு" திருச்சிற். 204.

329. அனீகம் - சேனை. யாதனை - துன்பம். அம்பல் தூற்றி; அம்பல் - சிலரால் அறியப்படும் பழிமொழி.



### பாங்கி சுரத்தியல் உரைத்துழித் தலைமகள் சொல்லல்.

330. சசியார் புரிசைக் கலைசைத் தியாகரைச் சார்கிலர்போல்
ஓசியாதிற் குஞ்சிற் றிடையாயென் கூறினை யூரவர்வாய்க்
கசியாச்சொற் றீயிற் கனற்றப்பட் டேற்குக் கடுமை பொங்கும்
சுசியார் வனமும் வனமாஞ் சிவசிவ தூன்னிடினே. (௯)

### பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்தல்.

331. ஆனந்தக் கூத்தர் கலைசைத் தியாக ரருமறைபோல்
ஈனந்தங் காமெய்ய னீயென் றிவளை யினிதளித்தேன்
மானந்தங் குன்னரு ளும்பிறி தாயின் மழைசுருங்கித்
தானந் தவமற் றிரண்டுமொன் றாமித் தரையிடத்தே. (௧௦)

### பாங்கி வைகிருள் விடுத்தல்.

332. மைவாரு மல்லிற் கலைசைத் தியாகர் வரையணங்கே
இவ்வாண் டகைபின்னர் நீசெல்லு மார்க்கம்வந் தெய்துவல்யான்
அவ்வாத வூரர்முன் றேர்வெவ் வாயை யடக்கியபோல்
ஒவ்வா வலருரைப் பார்பல வாயு மொடுக்குவித்தே. (௧௧)

### தலைவியைத் தலைவன் சுரத்துய்த்தல்.

333. மண்ணிற் சிறந்த கலைசைத் தியாகர் வளர்சடைநீர்த்
தண்ணிற் சிறந்தவெண் பாலாற்று முத்தமுஞ் சாற்றுமலர்
கண்ணிற் கருணைக் கடல்போற் குளிரிளங் காவுங்கண்டு
பெண்ணிற் சிறந்தவண் மெல்லமெல் லப்பதம் பேர்த்தவையே.

---

330. சசி - சந்திரன். கசியா - அன்பில்லாத. கசி - நெருப்பு. வனம் - பாலைநிலம், நீர். சிவ சிவ: இரக்கக் குறிப்பு; "அரகர" (355) என்பர் பின்; "தையல் சிவ, சிவனச் சராவு மிலையோ வெனுமிளந் தென்றலுக்கே" (கூழை யந். 36); "சிலையோ கரும்புபொரு கணையோ வரும்புசிவ சிவவாவி யொன்று ருவதோ" மதுரைக்கலம். 83.

331. மெய்யன் நீ என்று. மானம் - அபிமானம். தானந்தவமென்னு மிரண்டும் ஒன்றாகக் கூறப்படும்; "தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம், வானம் வழங்கா தெனின்" திருக்குறள், 19.

332. அல்லில் - இருளில், தேரர் - புத்தர். அடக்கியது போல்: தொகுத்தல். ஒடுக்குவித்து யான் வந்து எய்துவல்.

333. கா - சோலை. சிறந்தவள்: வினி.

### தலைமகன் தலைமகள் அசைவறிந் திருத்தல்.

334. முச்சோதி யங்கட் கலைசைத் தியாகரை முன்னலர்போல்
அச்சோவுன் செம்பொ னடித்தா மரையி லாம்பொருகற்
றச்சோ திமநடைத் தையலெய்ப் பாயினை சாந்தமுற
இச்சோலையினிழற் கீழிருப் பாஞ்சற் றிளைப்பறவே. (கங)

### தலைமகன் தலைமகளை உவந்து அலர்சூட்டி உண்மகிழ்ந் துரைத்தல்.

335. பாதபத் மங்க ளிவட்கியான் வருடவும் பாலையின்கீழ்ச்
சீதள மாலை திருமுடி சூட்டவுந் தென்கலைசை
நாதனெங் கோனைச் சிதம்பர வீசனை நாடியந்நாள்
மாதவங் கோடிசெய் தன்றோவிப் பேறின்று வாய்த்ததுவே. ()

### கண்டோர் அயிர்த்தல்.

336. நாந்தஞ்ச மாக்கொள் கலைசைத் தியாகர்நன் னாட்டுறையும்
மாந்தர் கொலோவிச் சுரத்திவர் யார்குற வள்ளியென்னின்
பூந்தண் குழலிவள் கையிற்கல் லாரமென் போதில்லையாற்
சேந்தனென் றிவன் செம்மார்பில் வெட்சித் தெரியலின்றே.

### கண்டோர் காதலின் விலக்கல்.

337. வில்வேளு மந்த விரதியும் போல்வரு வீர்கலைசை
நல்வேத கீதர் சிதம்பர வீசரை நண்ணலர்போல்
கல்வேம்வெங் கானத் தினிச்செல் லொணாது கதிர்மறைந்த
தில்வே றிலையினி யல்வேளை யெம்மி லிருந்துண்ணுமே. (கசு)

---

334. முச்சோதி அம் கண் - முச்சுடர்களாகிய அழகிய கண்களையுடைய. அச்சோ-ஐயோ. அரம்-வாளரம். கல் தச்சு; தச்சு-தைத்து. எய்ப்பு - இளைப்பு.

335. இவட்கு - இவளுக்கு. பாலையின் - பாலைமரத்தின். செய்தன்றோ - செய்தமையா லன்றோ.

336. தஞ்சம் - பற்றுக்கோடு. கல்லாரப் போது - கழுநீர் மலர். சேந்தன் - முருகக் கடவுள். வெட்சித் தெரியல் - வெட்சி மாலை. வள்ளி நாயகியார் திருக்கரத்தில் குவளைமல ருண்டென்பதை, "இறைகதித்த சூர்முதலையிறப்பவரனேயிளையோ னுன வாற்றன், மறைகதித்த விருசுடரே முகத்துவிழி யெனத்தெரிக்கு முறைமை போல, நறைகதித்த மலர்க்கழுநீர் நளினமவன் விழியருகு நலக்க வேந்தி, நிறைகதித்த வுளத்தொடிடம் வலமமர்ந்த மாதர்பத நினைத்தல் செய்வாம்" (தணிகைப் புராணம், கடவுள். 5) என்பதனு லுணர்க.

337. கல் வேம் - கற்கள் வேதற்குக் காரணமாகிய. செல்ல ஒண்ணாது. கதிர் - சூரியன். வேறு இல் இலை இனி. அல் வேளை - இரவில்.



### கண்டோர் தம்பதி அணிமை சாற்றல்.

338. இம்மாது நீயுமின் றிம்மா திரங்கடந் தேகினெங்கும்
செம்மாணிக் கச்சுடர் மாடமுங் கூடமுஞ் சேர்கிடங்கும்
அம்மா மதில்களுஞ் சூழ்ந்தெதிர் தோன்று மமரர்க்கெல்லாம்
பெம்மான் சிதம்பர வீசன் கலைசைப் பெருநகரே. (கஎ)

### தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக் குணர்த்தல்.

339. முதுகா ரணனு மெழுதரி யாயிரு மூன்றுடன்முப்
பதுகா தமுநடந் தேவந் தணைந்தனம் பாற்கானு
ரதுகா யழல்வெம்மை யுட்புகு தாம லடர்பொழில்சூழ்
இதுகாண் சிதம்பர வீசன் கலைசை யெழினகரே. (கஅ)

## உஉ. கற்பொடு புணர்ந்த கவ்வை.

### செவிலி பாங்கியை வினாதல்.

340. பொன்னங் கொடியொன்று தானடந் தேவால் போல்வருமென்
அன்னந் தனியெங்ங னூற்றது பொற்றொடி யாய்நடஞ்செய்
மன்னம் பலவர் கலைசைத் தியாகரை வாழ்த்தலர்போல்
தன்னந் தனிநின்று நீயென்கொல் வாடித் தளர்கின்றதே. (க)

### பாங்கி செவிலிக் குணர்த்தல்.

341. கடுத்தார் மனநம் மினத்தாரன் னேபின்னுங் காதன்மணம்
தடுத்தா ரதனிற் கலைசைத் தியாகர் தமதருளால்
வடுத்தான் படாமற் சுரத்தெரி யாற்றி மலரொருநாள்
கொடுத்தா னொருவன்பின் னேநடந் தாளுன் குலக்கொழுந்தே.

---

338. இன்று - இன்றைத் தினம். மாதிரம் - மலை. பெருநகர் தோன்றும்.

339. முது காரணன் - பிரமன். முப்பத்தாறு காதம். பாற்கானூரது - சூரியனது.

340. என் அன்னமென்றது தலைவியை. தன்னந்தனி - மிகத் தனியே; "தன்னந்தனி நின்றழு கின்றவத்தையல்" வி. பா. திரௌபதி. 82.

341. கடுத்தார் - ஐயமுற்றார். அதனின் - அதனால். எரி ஆற்றி - வெப்பத்தைப் பொறுத்து. வடு - கற்புக்குக்குற்றம். மலர் ஒருநாட் கொடுத்ததை 316—ஆம் செய்யுளால் அறியலாம்.

பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவோர்க்கு எதிரழிந்து மொழிதல்.

342. ஓராட்டி பாகர் கலைசைத் தியாக ருயர்வரைமேல்
நீராட்டி யென்முலை யூறமு தூட்டியெஞ் சோறுநான்
சீராட்டி யேந்தி வளர்த்ததற் கோவெனைத் தெவ்விற்கண்டென்
ஏராட்டி விட்டகன் றுளாறு மோவெனக் கித்துயரே. (௫)

செவிலி தன் அறிவின்மைதன்னை நொந்துரைத்தல்.

343. பிரிவைக் கருதிக் கலைசைத் தியாகர் பெருவரைமேற்
பரிவைப் பெருக்கியன் னேயென் றழைத்துப் பழகுமிந்த
அரிவைக்குப் பாலையல் லாற்குடி யாதென் றறைந்துமெள்ளத்
தெரிவித் தகன்றன ளாற்பேதை யேனுந் தெரிந்திலனே. (௬)

செவிலி தெய்வம் வாழ்த்தல்.

344. முடிகொண்டு நின்னடி போற்றுவ லென்செல்லன் முற்றுமறக்
கடிகொண்ட காளைபின் சென்றளை மீட்டின்று காட்டுதியால்
படிகொண்ட கீர்த்திக் கலைசைத் தியாகர் பணிவரைமேற்
குடிகொண் டிருந்தென்று மெங்களைக் காக்குங் குலதெய்வமே.

செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநிற்றல்.

345. ஒருகயந் தள்ளி யொருகயம் வீழ்ந்தெடுத் தோனிருக்க
அருகய லார்க்குக் கொடுப்பான் றனைநினைந் தார்களென்றே
திருகய நெஞ்சத்தர் காணாக் கலைசைத் தியாகர்வெற்பிற்
பொருகயற் கண்ணவ ளன்னே விடலைபின் போயினளே. (௮)

342. ஓர் ஆட்டி - ஒப்பற்ற பெண்; ஆட்டி - பெண்; "நந்நாட் டாட்டியர்" (பெருங். 1. 43: 25.) அமுது - பால். தெவ்விற் கண்டு - பகையைப் போல அறிந்து. ஏராட்டி - அழகையுடையவள்.

343. பரிவு - அன்பு. இந்த அரிவை யென்றது தலைவி தன்னையே சொல்லிக்கொண்டது. பாலை அல்லால் குடி யாது - பாலல்லாமல் வேறு பருகுதற்குரியபொருள் என்ன உண்டு என்பது செவிலி கொண்ட பொருள்; பாலை நில மல்லாமல் இருப்பிடம் யாதென்பது தலைவியின் உட்கோள். பேதை - அறிவற்றவளாகிய நான்.

344. செல்லல் - துன்பம். கடி - மணம். காளை - பாலைநிலத் தலைவன்; பதினாறு பிராயமுள்ளவனென்பர்.

345. ஒரு கயம் தள்ளி - ஒரு யானையை வேலாற் குத்தி வீழ்த்தி. ஒரு கயம் வீழ்ந்து எடுத்தோன் - ஆழமான ஒரு நீர்நிலையில் விழுந்து எடுத்தவன். தனை கொடுப்பான் - தன்னைக் கொடுக்கும்பொருட்டு. திருகு அயம் நெஞ்சத்தர் - மாறுபட்ட இரும்பு போன்ற வன்னெஞ்சர். விடலை - பாலைநிலத் தலைவன்.



நற்றாய் பாங்கிதன்னொடு புலம்பல்.

346. நோக்கிநல் லாள்கருத் தீதென் றுன்னொடு நுவன்றவந்த
வாக்கினை யெங்கட் குணர்த்தா தனைத்தை வனத்தவமே
போக்கினை யேதென் கலைசைத் தியாகர் பொருப்பிலெங்கள்
மூக்கினைச் சுட்டு விரல்சேர வைத்தழ முற்றிழையே. (௭)

நற்றாய் பாங்கியர்தம்மொடு புலம்பல்.

347. கரத்திற் கபாலர் கலசத் தியாகர் கலைசையெம்மான்
வரத்தின்மிக்காளொருவள்ளல்கைத்தார்பெற்றுவாய்மைகுன்றா
உரத்திற் சிறந்தொரு தெய்வந் தொழாத வுறுதிபெற்றாற்
சுரத்திற் றுணிந்துட னேகவும் வேண்டுங்கொ றோகையரே. ()

நற்றாய் அயலார்தம்மொடு புலம்பல்.

348. அகத்தார்க் கரியர் கலைசைத் தியாக ரளித்தருள்சண்
முகத்தான் றிருமுன் வரங்கிடந் தியான்பெற்ற மொய்குழலாள்
சுகத்தாறு காட்டவல் லாளொரு வன்பின் சுரத்திலிவ்வூர்
நகத்தா னகன்றன ளட்டாற்றுச் சாயென நானையவே. (௯)

நற்றாய் தலைமகள்பயிலிடந்தம்மொடு புலம்பல்.

349. திருந்தேற் கருளுஞ் சிதம்பர வீசர் திருக்கலைசைப்
பெருந்தேவி யன்னவென் பெண்பிள்ளை யாடும் பெருஞ்செயலாய்
குருந்தே குருக்கத்தி மண்டப மேயுங் குளிர்ந்தநிழல்
இருந்தே பிரிந்தவ ளெங்கான வென்றுவந் தெய்துவளே. (௧௦)

346. நல்லாள் - தலைவி. வனத்து அவமே ஏது என் - காரணம் என்ன. சுட்டுவிரலை மூக்கின்மேல் வைத்து அழ; "வன்புடன் சுட்டு விரல் மூக்கி னுச்சியில் வைத்துப்பெண்டிர், கொன்பழி தூற்றப் பயந்தாா்" (திருவாவடுதுறைக்கோவை, 331), "சிலரும் பலருங் கடைக்க ணோக்கி, மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி, மறுகிற் பெண்டி ரம்ப றூற்ற" நற்றிணை. 149.

347. உரத்தில் - அறிவில். தெய்வந்தொழாத உறுதி - கற்பு; "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்" குறள், 55.

348. அகத்தார் - பாவிகள். சுகத்து ஆறு - இன்ப வழியை. இவ்வூர் நக - இந்தவூரினுள்ளார் சிரிப்ப. சாயென - கோரையைப் போல. நான் நைய.

349. செயலாய் - அசோக மரமே. குருந்தே - குருந்தமரமே. குருக்கத்தி மண்டபம் - குருக்கத்திக்கொடி மாடம்.

## நிமித்தம் போற்றல்.

350. அரைவா யரவர் கலைசைத் தியாக ரமர்ந்தவெள்ளி
வரைவாய் மரையி னிணைப்பலி யென்று மகிழ்ந்திடுவேன்
இரைவாய் நிறைய வெடுத்துண்ண லாமின்றெ னேழைவாக்
கரைவா யிருகட் கொருமணி யைங்குணக் காக்கொடியே. (கக)

## நற்றாய் சுரந்தணிவித்தல்.

351. நாரமில் லாவெஞ் சுரநாடு பாலிநன் னூடெனலாய்
வாரங் கலைசைத் தியாகேச வுன்றன் வலக்கண்ணினாற்
கோரஞ்செய் யாமற் குளிர்விக்க வேண்டுங் குடங்கொண்முலைப்
பாரம் பொறுதிடை தள்ளாடச் செல்லுமென் பைந்தொடிக்கே.

## நற்றாய் தன்மகள் மென்மைத்தன்மைக்கு இரங்கல்,

352. அஞ்சத்த னப்பர் கலைசைத் தியாக ரரணடுவான்
அஞ்சத்த மாமறை சொன்னசெவ் வாயெழு மந்நகைபோல்
அஞ்சத் தழல்செ யடவிவெங் கற்றிரட் காற்றினவோ
அஞ்சத் திறகும் பொறுதவென் பேதை யடிமலரே. (கரு)

---

350. அரைவாய் - இடையில். மரை - ஒருவகை மிருகம். மகிழ்ந்து பலியை இடுவேன். இருகட்கு ஒருமணி: "காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கு" (திருச்சிற். 71.) ஐங்குணக் கொடியே - ஐந்து குணங்களைக் கொண்ட காக்கையே; "குணங்களஞ் சாற்பொலி யுந்நலச் சேட்டைக் குலக் கொடியே" (திருச்சிற். 235) என்பதையும் அதன் உரையையும் பார்க்க.

351. நாரம் - நீர். சுரநாடு - பாலைநிலம். பாலி - பாலாறு. வார் அம். வலக்கண் - சூரியன். கோரம் - கொடுமை.

352. அஞ்சு அத்தன் அப்பர் - ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகருக்குத் தந்தையார். அரண் அடுவான் - முப்புரங்களை அழித்தற் பொருட்டு. அம் சத்தம் மாமறை. செவ் வாயில் எழும். அடுவான் எழும் நகை போல். அஞ்ச - அஞ்சும்படி. அஞ்சத்து இறகும் - அன்னத்தின் தூவியும். அடிமலர் ஆற்றினவோ.




| | |
|---|---|
| கோதவமொன் | 434 |
| கோதற்ற | 223 |
| கோதிச்சிக் | 302 |
| கோதில்குல | 334 |
| கோதைபிறங் | 432 |
| கோலெடுத் | 206 |
| கோழியுங் | 47 |
| கோள்வாய் | 150 |
| கோளரிருக் | 371 |
| **ச** | |
| சகன்கால | 224 |
| சங்கறுப்ப | 322 |
| சங்குதீர்த் | 497 |
| சங்குமுள | 21 |
| சடம்பழுக் | 217 |
| சத்தம்பயி | 341 |
| சத்துமசத் | 483 |
| சதுமுகனிற் | 391 |
| சந்தனப்பொதி | 493 |
| சந்தனுடவி | 237 |
| சந்திரசே | 215 |
| சாங்கொண் | 279 |
| சரநிறைத் | 249 |
| சராசி | 219 |
| சரியும்புனை | 133 |
| **சா** | |
| சாக்கியங் | 426 |
| சாணர்க்கு | 274 |
| சாத்திரம்பா | 223 |
| சார்பினுற் | 1 |
| சாலப்பழுத்த | 286 |
| சாலியரி | 114 |
| சான்றோ | 90 |
| **சி** | |
| சிங்களஞ்சோ | 495 |
| சித்திதரு | 409 |
| சித்திரமு | 69 |
| சித்திரை | 441 |
| சிதம்பரப் | 383 |
| சிரப்பான் | 324 |
| சிரமேவு | 219 |
| சில்செவியன் | 233 |
| சிலையாமெ | 297 |
| சிலையுடை | 195 |
| சிவபுராணங் | 478 |
| சிற்றம்பல | 250 |
| சிற்றாசூர் | 334 |
| சிற்றியாறு | 501 |
| சிறுக்கீரை | 327 |
| சிறுநன்றி | 69 |
| சிறைபடுவ | 120 |
| சின்னமனத் | 410 |
| **சீ** | |
| சீதளசங் | 393 |
| சீயஞ்சுமங் | 33 |
| சீரகொண்டசெங் | 225 |
| சீர்கொண்டவெள் | 217 |
| சீர்கொள்பிர | 405 |
| சீர்த்ததுக | 150 |
| சீர்பெறு | 413 |
| சீர்வசன | 435 |
| சீரங்கத் | 367 |
| சீரார்கயிலை | 441 |
| சீரார்திரு | 22 |
| சீராருமா | 428 |
| சீரிலகு | 314 |
| சீரொன்று | 434 |
| சீலத்தான் | 19 |
| சீலமுனிவ | 359 |
| சீற்றங்கண | 117 |
| சீற்றமிகு | 191 |
| **சு** | |
| சுடரிலைவேற் | 131 |
| சுத்தபாற் | 368 |
| சுரதந்தனி | 92 |
| சுரமறிவன | 506 |
| சுரிகுழலங் | 295 |
| சுருதித்தமி | 436 |
| சுரும்பேய் | 217 |
| சுரையாழ | 509 |
| சுலவுமலர்ச் | 468 |
| சுற்றுங்க | 70 |
| சுற்றுவிற் | 188 |

### சூ

சூட்டும்பா 276
சூத்திரமீ 480
சூழ்ந்துமு 17
சூழும்பிணை 269
சூழுமாகடற் 383

### செ

செக்கோ 371
செகமெனும் 488
செங்கணெடி 126
செங்கரங் 189
செங்கான்மடநாராய் 132
செங்கான்மடவன் 184
செங்குன்றை 306
செஞ்சிச்செய 305
செஞ்சுடர்வட 23
செஞ்சுடரின் 375
செஞ்சொல் 411
செட்டிமக் 343
செந்தமிழ்க் 383
செந்தமிழ்ச்செய் 505
செந்தமிழோர் 372
செந்தழலின் 229
செந்தாமரை 514
செந்திருமார் 406
செப்பாருமுகிழ் 374
செம்மையுடை 114
செய்கையரிய 121
செய்துமோ 330
செய்யகொழு 408
செய்யாரொளி 135
செய்யாள்கணை 276
செய்யும்வினை 48
செருமானவேற் 188
செருவலரா 239
செருவிளை 35
செருவெங் 106
செல்லாவை 196
செல்வப்போர்க் 240
செல்விதிருத் 252
செவ்வந்தி 291
செழுமலர் 442
செற்றவர் 110
சென்றதுகொல் 139
சென்றநிரைப் 99
சென்றவுயிர் 116
சென்றுசெவி 340
சென்றுமாமே 282
சென்றுழு 87

### சே

சேடன்படி 442
சேணுயர் 108
சேணுலவு 225
சேதாம்பல் 252
சேதுபதியெ 296
சேந்தனவே 114
சேமங்குரு 426
சேய்கொண்டா 448
சேய்மொழி 427
சேயசெங் 289
சேயரிநாட் 26
சேர்ந்தபுற 151, 126
சேரலர்கோ 324
சேரன்மக 248
சேல்கண்ட 447
சேலேறிய 223
சேலையுடை 366
சேற்றுக்கமல 272
சேற்றூரார் 311
சேனைதழை 271

### சை

சைவசமயஞ் 448

### சொ

சொக்கன் 369
சொருக்கவிழ் 370
சொல்காப் 280
சொல்லல்சொ 62
சொல்லலோம் 62
சொல்லவரி 494
சொல்லவை 68
சொல்லாமலே 66
சொல்லிவிடு 270
சொல்விற்சுருங்கி 476





சொல்வினைவிற் 483
சொல்லுப 64
சொல்லொடு 488
சொல்வாழ்ந்த 465
சொல்லென்னும் 505
சொற்கோ 438

### சோ

சோதிமண்டல 38
சோதியிரவி 187
சோலைபயிலும் 512
சோலையையோ 504

### ஞா

ஞாலத்துழி 475
ஞானம்பெரு 67

### த

தகரக்குழ 195
தகாதுயிர் 77
தகைவந்த 100
தடக்கடலிற் 368
தடக்கும்ப 300
தடங்கடற் 30
தடங்கடன்ம 231
தடங்குலவு 178
தடந்தாட் 23
தடமண்டு 501
தடமார்தரு 336
தண்கவிகைக் 381
தண்கவிகையர் 186
தண்டண்டலைத் 190
தண்டாமரை 182
தண்டாமலீ 70
தண்டைச்சுர 468
தண்டுறைநீர் 88
தண்ணமுத 419
தண்ணளிசேர்ந் 150, 313
தண்ணார் 261
தண்ணிலவு 450
தண்ணீரு 333
தண்மலர்வில் 497
தத்தைகுண 475
தந்தைபிறங் 367
தந்தையிலைச் 242
தம்மாற்ப 186
தரசமயத் 484
தரணிபுகழ் 291
தராதலத் 346
தருக்குலவு 370
தருக்கொளும் 298
தருகாளமே 390
தருதஞ்சை 406
தருமணி 413
தருமமுமீ 144
தருமர்மணக் 352
தருமவிந்த 241
தலைகொணஞ் 438
தலைமகனிற்றீ 64
தலையான 433
தலையிழந்தா 81
தலையினமர் 11
தலைவன்மதில் 104
தவத்தின்மே 79
தவளத்தாம 29
தவளையுக 141
தவிப்பார்க் 395
தழிச்சியவாட் 102
தள்ளாவிடத் 188
தளிப்பெயர் 63
தளையவிழப் 244
தளையவிழும் 138
தற்கொள்பெ 111
தற்கோலிப்பூ 20
தற்பாடுபெ 82
தற்றூற்றன் 171
தன்சேருணன் 22
தன்னுடன 280
தன்னுடைய 260
தனக்கொருப 215

### தா

தாக்கற்குப் 104
தாதாவென் 263
தாதையார் 152
தாமரைவண் 492
தாந்தங்கடை 104
தாய்வாங்கு 109

தாயரடைப்ப 128
தாயரவை 25
தாயோடறு 93
தாரகாயண 364
தாரநல்விதந் 63
தாருமுடியு 267
தாழ்ந்தவுணர் 63
தாழிகவிப்ப 149
தாழியோங்கு 498
தாழிரும்பி 192
தாளவந்த 380
தாளாளரல் 88
தாளோங்கிய 46
தானஞ்செய் 79
தானால்விலங் 147
தானேற்றனி 136
தானைகொண் 131

தி

திக்கயங்க 236
திக்குளெட் 10
திக்கெட்டும் 476
திங்கட்குடை 325
திங்களிளங் 241
திங்கள்சொரி 510
திங்களோர்தரு 162
திங்களோர்மல 170
திண்ணவின்ப 465
திரம்பெறு 290
திரமேவுவிசு 293
திரிவறுசொல் 443
திருக்குடந்தை 498
திருக்கிளர்தா 498
திருக்கொண்டு 82
திருகியபுரி 37
திருத்தக்கமா 467
திருத்தகுசீர் 354
திருத்தகுமாமுனி 473
திருத்தங்க 348
திருத்தங்கி 266
திருத்துறையூர்ச் 482
திருத்தேர்பு 229
திருந்தியதமி 353
திருந்திலைய 240
திருந்துதிருத் 467
திருந்துதமி 449
திருநெல்வேலி 396
திருப்பட்டீச் 490
திருப்புலம்பன் 479
திருமகள்போ 159
திருமகள்வி 166
திருமகளகலா 456
திருமருவுஞ்சிவ 445
திருமேற்றளிக் 490
திருமருவுபஞ் 379
திருமன்னிவள 160
திருமன்னிவி 173
திருமாமகடன் 433
திருமாதுபுவி 164
திருமாலரனு 447
திருமாலுமீ 289
திருமாற்கிரு 473
திருமிகுத்த 405
திருமேவுபது 49
திருவளர்தி 166
திருவளரச் 206
திருவளரும்பெ 460
திருவன்னை 479
திருவாக்குஞ் 23
திருவாதவூ 351
திருவாலவா 403
திருவொடுங் 204
திரைகவுள் 95
திரைகொண்ட 306
திரைத்தவிரி 87
தில்லைச்சிற் 250
தில்லைத்தியா 252
தில்லைப்பெரிய 251
தில்லைமூவா 253
தில்லையிற்பொன் 249
தில்லைவளருந் 253
திறந்திடுமின் 130
திறையின்முறை 497
தினைவிளைத் 235

தீ

தீட்டுக்கவி 386
தீய்ந்துபொ 268
தீயவையென் 87





து

துயரறுசாலி 462
துங்கக்கனக 36
துடித்தடித் 48
துடியடித் 140
துதிவாணி 95
துளவதுளவ 403
துளைபடுமா 340
துற்றனவாகத் 69
துறவுளவா 94

தூ

தூசுதூசாக் 333
தூசுமது 277
தூபங்கம 340
தூய்த்தீம் 232

தெ

தெண்டிரைநீர் 248
தெண்ணீர்நறு 131
தெண்ணீர்பரங் 89
தெய்வத்தமிழ் 410
தெய்வப்புலமை 354
தெரிவரிய 443
தெரிவில்லாவி. 44
தெருள்சிவப் 455
தெவ்வாயெதிர் 195
தெள்ளறல் 508
தெள்ளிமொழி 353
தெள்ளுதமி 386
தெள்ளுபுனற் 250
தெற்குக்குடக் 32
தென்குமரி 124
தென்பாண்டி 495
தென்பாராளு 372
தென்வேந்தன் 249
தென்றலணங் 515
தென்றலிடை 124
தென்றலுலவ 498
தென்னதிசை 255
தென்னரங்கன் 310
தென்னருணை 446
தென்னர்முத 268
தென்னவன்தென் 341
தென்னவன்மணி 485
தென்னவாமீன 226
தென்னோங்கு 450

தே

தேங்கானன் 18
தேங்குபுக 362
தேட்டாளன் 301
தேர்க்கொடி 270
தேர்போலல் 215
தேருடைத்தாய் 330
தேருளைப்புரவி 272
தேரையார் 334
தேரோன்மகன் 146
தேவியருங் 435
தேனக்கலர் 22
தேனருமகி 427
தேனாட்டுமல் 296
தேனார்மொழி 296
தேனாருஞ்செ 259
தேனோங்கு 8

தொ

தொக்ககலியின் 159
தொக்குத்துறை 500
தொட்டிலிருக்க 285
தொடியுடைய 145
தொடையெலாந் 417
தொண்டைநன் 490
தொண்டையங் 228
தொல்காப்பியக்கட 476
தொல்காப்பியதேவர் 362
தொல்காப்பியப் 319
தொல்லைப்பதி 250
தொல்லைமறை 26
தொல்லைபிரும் 478
தொல்லோர்வாழ் 253
தொழிறேற்றுப் 119
தொழுகின்றமன் I85
தொழுதுவிழா 105
தொழுமக 68
தொழுமுடிய 58

தோ

தோடவிழ்பூங் 470
தோடாரிலங்கு 55
தோடுகொண் 509
தோற்றமலை 113
தோற்றுதொழிந் 388

ந

நக்கேவிலா 90
நகைநணித் 89
நங்கோனிரா 468
நச்சிலைவேற் 117
நட்டப்பெரு 251
நட்டேரிற் 298
நடங்கவின் 251
நடந்ததெங் 227
நடித்தது 181
நடைக்குதிரை 192
நண்பிதென்று 64
நண்புற்ற 225
நண்ணினர்க்கு 81
நண்ணும்பொ 441
நண்ணுவார் 83
நணியகயிலா 293
நத்துவய 444
நதியாம்விரி 298, 448
நந்தினிளஞ் 493
நம்பாருள் 407
நம்பனடி 71
நரைகோட் 288
நல்யாகமன் 256
நல்லம்பர் 493
நல்லவை 86
நல்லார்வணங் 3
நல்லோரருள் 475
நல்வினைசெய் 472
நலங்கிளர்தி 42
நலத்தகுநால் 330
நலத்தகை 73
நவைக்கணம் 33
நற்றிணைநல் 473
நற்றோரண 303
நறவேந்து 133
நறுமாந்தளிர் 330
நறைகமழ் 133
நன்கெனநாறு 75
நன்மைமேவு 62
நன்றுள்வேங் 501
நன்னூலுட் 398

நா

நாகிளம்பூம் 33
நாகினநந்தி 59
நாட்டிற்சிற 401
நாடியநட்பு 81
நாடுமூரு 63
நாடேபிறர் 487
நாணுக்காற் 137
நாணியென் 451
நாணென்று 367
நாணொருபால் 132
நாதனிரத 308
நாப்பிளக்கப் 439
நாமகள்கோ 475
நாமநெடு 133
நாமானர 270
நாமேவெழுத் 336
நாயகர்க்கு 111
நாயகர்வீதி 252
நாராய்நாராய் 335
நாராயணப 8
நாலடிநான் 474
நாவுண்டு 8
நாளார்பெரும் 281
நாறும்புள் 96
நாளைவரகுணர் 203
நான்மருப்பில் 154
நானிலத்தை 177
நானேயினிச் 341

நி

நிகண்டுருளா 489
நிட்டையிலே 449
நித்திலங்கழ 192
நிதிநிகர் 405
நிலவுபொழி 375
நிறைமதிபோ 119
நினைவரிய 191





நிட்டோமாக 93
நிணம்போத 302
நித்திலஞ் 96
நிரைகதிர்வேன் 114
நிரையாநிரை 512
நில்லாதுசெல் 73
நிலங்காரண 7
நிலம்பொறை 71
நிலமகள்கேள் 227
நிலனும்விசும் 11
நிலைதந்தா 11
நிலையடைய 482
நிழலருமை 260
நிழற்கோப 512
நிற்பவேநிற் 65
நிறையவுள 450
நின்றநீதி 350
நின்றீயின் 119
நினைவுகவி 85

நீ

நீங்காம 432
நீடியபூங் 194
நீடிருங்குன் 329
நீடுமதிகை 256
நீணிலத்தார் 130
நீணிலவேந் 101
நீதிபெறுகல் 415
நீயேயறிவை 427
நீருநிழலு 129
நீரொலாஞ் 345
நீரோபிறவா 368
நீலநிறத்தன 74
நீலநெடுங் 23
நீலமணிமி 19
நீலமழை 9
நீளத்திரிந் 267
நீறணிந்த 715

நு

நுண்ணறிவு 84

நூ

நூல்செய்த 396
நூலின்மரபு 469
நூலாநாலா 318
நூற்றுப்பத் 326
நூறுயிர 253

நெ

நெஞ்சுக்கிருள் 431
நெட்டிலை 321
நெடுநிலையாய 96
நெடுவரைச் 232
நெய்யார்ந்த 410
நெய்யொடுதிரி 26
நெருநலென் 72
நெற்பயிர் 344

நே

நேசனைக்காணு 92
நேசித்துவந்த 300
நேமிநிமிர் 119
நேற்றினு 282
நேற்றும் 390

ப

பகலவன் 425
பகலெறிப்ப 105
பகைவர்கொண்ட 100
பங்கப்பழனத் 134
பசுப்போல் 66
பச்சைமாலனை 357
பஞ்சநதி 277
படிகநிறமு 29
படுபருந்து 113, 236
படையயக் 284
படையொன்று 38
பண்கொண்ட 33
பண்டுபுர 18, 510
பண்டுமொரு 242
பண்பட்ட 211
பன்பார்கவி 349
பனைவாளரவ 434
பணிமின்கள் 19
பத்தம்பிற் 334
பத்தித்தகட்ட 16
பத்துக்கொண் 338

| | | | |
|---|---|---|---|
| பத்தருபா | 409 | பாங்குயர் | 294 |
| பம்பிடச்சிங் | 308 | பாசடைப் | 54 |
| பரங்குன்றொ | 48 | பாசிழையா | 241 |
| பரப்போத | 344 | பாட்டுத்தொடுக் | 338 |
| பரமர்திரு | 408 | பாடகஞ்சேர் | 15 |
| பரவைமாக் | 73 | பாடல்பெருனே | 71 |
| பராஞரியல் | 311 | பாடலாஞ்செங் | 384 |
| பராவரு | 346 | பாடியசம் | 439 |
| பருதிவேன் | 116 | பாடுகோ | 230 |
| பருந்துநிழ | 358 | பாடுந்தமிழ் | 294 |
| பருப்பதங்க | 299 | பாடுமுறைநமை | 384 |
| பருமை | 252 | பாடுவதெல் | 427 |
| பருவந்து | 79 | பாடுவன்பாடு | 302 |
| பருவராலு | 357 | பாடுவார்பா | 361 |
| பருவவனங் | 184 | பாண்டியரிற் | 347 |
| பரூஉத்தடக் | 193 | பாண்டியனை | 272 |
| பல்யானைமன்னர்படு | 119 | பாணன்ம | 272 |
| பல்யானைமன்னர்முருங் | 123 | பாப்புக்குரங் | 367 |
| பல்லக்குமே | 380 | பாம்புகடித் | 67 |
| பல்லாபெயர்த் | 149 | பாமருவுகின்ற | 239 |
| பல்லார்க்கு | 242 | பாயிரமீராறு | 483 |
| பல்லுருவக் | 114 | பார்க்கவனைத் | 303 |
| பல்வளையார் | 191 | பார்கெழு | 450 |
| பலமன்னு | 196 | பார்படுவசெம் | 127 |
| பலமுறையு | 73 | பார்புகழ் | 458 |
| பலித்துகங் | 414 | பார்விருத்த | 481 |
| பலியுருவிற் | 12 | பாரத்தொல் | 355 |
| பழியும்புக | 340 | பாரதகல் | 427 |
| பழுத்துடைங் | 262 | பாரார்சொல் | 309 |
| பள்ளமுதுநீர் | 63 | பாரிபறித்த | 323 |
| பள்ளமேசெய் | 303 | பாரிலேநமக் | 404 |
| பற்பமெனத் | 430 | பாரைச்சுமங் | 342 |
| பற்றலர்மண் | 225 | பாரோங்கு | 268 |
| பற்றிப்பல | 327 | பாரோர்புக | 411 |
| பற்றுஞ்சக | 447 | பால்வாய்மண | 502 |
| பறியாரோ | 377 | பாலலகை | 370 |
| பறைநிறை | 109 | பாலாகும் | 472 |
| பன்மாடக் | 134 | பாலாழியிற் | 294 |
| பன்றிகோடு | 281 | பாலெல்லர் | 354 |
| பன்னுகவி | 222 | பாலையிலான் | 310 |
| பன்னெறியி | 460 | பாலைவிய | 474 |
| | | பார்புகழ்குரு | 392 |
| பா | | பாருளோர்க் | 391 |
| | | பாவடுக்கு | 513 |
| பாக்கத்திர | 283 | பாவலன்வாச | 275 |
| பாகசாதன | 237 | பாவுக்குள் | 404 |


## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| *8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றும்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

### செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| *1. | ஐந்திணையம்பது உரையுடன் ... ... | 0 | 3 | 0 |
| 2. | களநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) ... ... ... | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | | | |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) .. | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் ... ... ... | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12.* | பன்னிருபாட்டியல் ... ... ... | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் ... ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| [illegible]9. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| [illegible]). | நரிவிருத்தம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| [illegible] | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| [illegible].* | திருக்கலம்பகம் (ஷை) ... ... | | | |
| [illegible]. | குருமொழிவிஞவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| [illegible]. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ... | 0 | 2 | 0 |
| [illegible]. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| [illegible]7. | மதுரைத்திருப்பணிமாலை... ... ... | 0 | 8 | 0 |
| [illegible].* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 3[illegible]. | ஞானமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 3[illegible]. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையஉரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது .. ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ௸ ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:—1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ 4—8—0. இதுவரை 30 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன்தள்ளிக்கொடுக்கப்படும்.

T. S. P. P. MADURA-3A

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.